2019 - இதழ் 10

இலவசம்

## ஐப்பசி - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2019 - இதழ் 10

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 10**


## 4 என்னில் அன்பாய் இருக்கின்றாயா?

அன்பு குறைவுபட தொடங்கும் போது பிரிவினைகள் ஆரம்பமாகின்றன. உன்னை அன்பு செய்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு அன்புக்கு விரோதமாய் நடப்பது பொய்யான வாழ்வு.

## 6 விலைமதிக்க முடியாத மீட்பு!

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

என்னுடைய வாழ்க்கையிலே பெலவீனங்கள் உண்டு. என்னுடைய வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. நிர்ப்பந்தமான மனிதன் நான், இந்த பாவ சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்கக் கூடும்?

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிரேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

12ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... ஐப்பசி 2, 4, 5, 6, 8, 11, 15, 17, 21, 22, 23, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... ஐப்பசி 1, 2, 3, 5, 6, 7, 10, 13, 15, 20, 21, 26

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... ஐப்பசி 12, 17, 18, 27

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... ஐப்பசி 5, 6, 10, 14, 18, 20, 21, 23, 26, 28

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**
... ஐப்பசி 10, 13, 14, 16, 18, 26, 28

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... ஐப்பசி 8 , 15, 30, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**
... ஐப்பசி 4, 6, 11, 12, 14, 19, 21, 22, 24, 25, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**
... ஐப்பசி 1, 4, 5, 9, 11, 13, 14, 16, 23, 24, 25, 29, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... ஐப்பசி 4, 7, 8, 22, 30, 31

**பொறுமையோடு காத்திருங்கள்**
... ஐப்பசி 3, 6, 7, 11, 15, 17, 22, 27

**தேவ நீதி வெளிப்படும்**
... ஐப்பசி 3, 11, 22

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... ஐப்பசி 1, 7, 9, 10 , 16, 23, 24, 25, 28, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... ஐப்பசி 4, 5, 6, 7, 19, 20, 27

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... ஐப்பசி 1, 4, 7, 18, 19, 26, 27

gtachurch.ca

# என்னில் அன்பாய் இருக்கின்றாயா?

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

சிநேகமும் பகையும், அன்பும் வெறுப்பும் மனிதர்களிடையே காணப்படும் வாழ்க்கையின் நிகழ்வுகளாயிருக்கிறது. முன்பு சிநேகம் பாராட்டியவர்கள் பின்பு பகைமை பாராட்டியதுண்டு. முன்பு அன்பு செய்தவர்கள் பின்பு வெறுத்துத் தள்ளியதுமுண்டு. நான் நம்பியவர்களும் கைவிட்டனர் என்று மனிதர்கள் சொல்லக் கேட்டுள்ளோம். ஒருவேளை அத்தகைய நிலை எமக்கும் உண்டாகியிருந்திருக்கலாம்.

விஷேசமாக, குடும்பங்களிலே அன்பென்பது மிகவும் விரும்பத்தக்கதும் இன்றியமையாததுமாயுள்ளது. கணவன் மனைவியிடத்திலும், மனைவி கணவனிடத்திலும் எப்போதும் அன்பை எதிர்பார்க்கின்றார்கள். பிள்ளைகள் பெற்றோரிடத்திலும் பெற்றோர் பிள்ளைகளிடத்திலும் அன்பை எதிர்பார்க்கி ன்றார்கள்.

அன்பு குறைவுபட தொடங்கும் போது பிரிவினைகள் ஆரம்பமாகின்றன. உன்னை அன்பு செய்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு அன்புக்கு விரோ தமாய் நடப்பது பொய்யான வாழ்வு. தமது சுய ஆசைகள் விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்று யாரிடத்திலும் உறவு பாராட்டுவது அன்பா குமா? அத்தகைய உறவைப் பேணுபவர்கள் தாம் உண்மையிலே அன்பா கவே இருக்கின்றேம் என்றே எண்ணுவார்கள். ஆயினும் காலம் அவ்வுற வின் உண்மை நிலையை வெளிப்படுத்தும்.

உறவுகள் எல்லாம் அன்பினால் உண்டானவையல்ல. ஏனென்றால், அன்பு தூய்மையானது. அதில் அசுத்தம் கிடையாது. அன்பு உண்மையுள்ளது. அதில் களவு கிடையாது.

மனித உறவுகளுக்கப்பால் தேவனைக் குறித்து மனிதர்கள் பேசும்போது, தேவன் அன்புள்ளவரா? ஏன் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றது? என்று கேட்பவர்களுமுண்டு.

தேவன் அன்பாகவே இருக்கின்றார். ஆம், அவர் அன்பாகவே இருந்தார். இப்போதும் அன்பாகவே இருக்கின்றார். அவர் அன்பு கூர்ந்து மனிதனை சிருஷ்டித்தார். தமது சாயலின்படியேயும் தமது ரூபத்தின் படியேயும் அவர்களை சிருஷ்டித்தார். தமது நன்மைகளினால் அவனை ஆசீர்வதித் தார். ஆனால் மனிதனோ தேவனுக்குக் கீழ்ப்படியாது பாவ வாழ்க்கைக்கு தன்னையும் தன் சந்ததியையும் கீழ்ப்படித்திக் கொண்டான். ஆனாலும் தேவனோ மாறாதவராய், இன்னமும் அன்புள்ளவராகவே இருக்கின்றார்

தேவன் மனிதனிடத்தில் கேட்கின்றார் "நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கின்றாயா?" மனிதரோ அதிகமாக இதை சிந்திப்பதில்லை. நான் தேவனை அன்பு செய்வதா? ஏன்? அதை தேவன் என்னிடத்தில் எதிர்பார்க்கின்றாரா? என்ற பல கேள்விகள் மனிதனிடத்திலிருந்து எழுகின்றன.

என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன், என்று தேவன் கூறியுள்ளார். ஆகவே தம்மிடத்தில் நாம் அன்புகூர வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். மேலும் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு பெலத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் அன்பு கூருவாயாக என்று எழுதியுள்ளது. எனவே நாம் தேவனிடத்தில் அன்பு கூருவதை அவர் எதிர்பார்க்கின்றார். ஆனால் மனிதர்களோ நன்றியறியாதவர்களாகவும், தேவனிடத்தில் அன்பு கூராமலும் போகின்றார்கள்.

நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள உறவு அன்பினால் உண்டானதாயிருக்க வேண்டும். அதையே தேவன் விரும்புகின்றார். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார், என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார்.

தேவன் இருக்கின்றார் என்று நம்புகின்றோம் என்று மனிதர்கள் சொல்லக் கேட்டுள்ளோம். நாங்கள் அவரை விசுவாசிக்கின்றோம் என்று சொல்லுவதையும் கேட்டுள்ளோம். நாங்கள் அவரிடத்தில் ஜெபிக்கின்றோம் என்று சொல்லவும் கேட்டுள்ளோம்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். நான் தேவனிடத்தில் அன்பாய் இருக்கின்றேன். என் இருதயம் அவரில் மகிழ்கின்றது. என் செவிகள் அவர் கூப்பிடுதலுக்கு திறந்துள்ளது. என் நாவு எப்போதும் அவரைத் துதிக்கும், என்று சொல்ல வேண்டும். அவர் நன்மையை அனுப்புகின்ற தேவன்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# விலைமதிக்க முடியாத மீட்பு!

நானும் அவர்களைப் போல அவர்களோடு சேர்ந்து நாட்களை வீணில் கழித்து வந்தேன்! நான் அவர்களுக்கு மீட்பின் செய்தியை சொல்லாவிட்டால் யார் சொல்வார்கள்? என தன் பழைய நண்பர்களை குறித்த ஆதங்கத்தை ஒரு இளைஞன் கூறினான். அந்த இளைஞனின் கூற்றில் உண்மை உண்டு! நாங்கள் அறிந்த உண்மையை, அதாவது, பாவத்திலிருந்து விடுதலையாகும் வழியையும், இந்த பூமியிலே வாழும் நாட்களிலே தேவனுடைய விருப்பத்தை செய்யும் அவசியத்தையும், இந்த உலகைவிட்டு கடந்து சென்றபின்பு இருக்கும் முடிவில்லாத வாழ்வையும் குறித்த மீட்பின் நற்செய்தியை எங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர், அயலவர்கள் உட்பட யாவருக்கும் அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில் நாங்கள் பெற்ற விலைமதிக்க முடியாத அருமையான இந்த மீட்பை இந்த உலகத்தால் கறைப்படுத்தாமல் காத்துக் கொள்ள வேண்டும். இவை இரண்டிற்கும் இடையிலுள்ள வரையறை என்ன? இவைகளுக்கிடையிலுள்ள எல்லை எது? இவற்றைக் குறித்து நாங்கள் இன்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே தம்முடைய திருப்பணியை செய்து வந்த நாட்களிலே, யூத மதத் தலைவர்களுக்குள்ளே: பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் என்னும் பிரவினர் இருந்தார்கள். இவர்களில் அதிகப்படியானோர், தங்களைத் தாங்களே நீதிமான்கள் என்று ஏற்படுத்தியிருந்தார்கள். இஸ்ரவேலிலே காணப்பட்ட இந்தக் குழுவினரோ, ஆராதனை முறைமைகளை, முதன் முறையாக மோசே வழியாக பெற்ற நாட்களில் இருந்தவர்கள் அல்லர். காலங்கள் கடந்து சென்ற பின்பு, பலவிதமான சுய கொள்கைகளின் அடிப்படையிலே முறைமைகளை வகுத்த இவர்கள் தேவனுடைய ஜனங்களை வழிநடத்துவதைப் பார்க்கிலும் சட்டங்களை நிறைவேற்றுவதில் அதிக கவனத்தை செலுத்தினார்கள். அதாவது, ஒருவனின் ஆத்துமா அழிந்து போவதைப்பார்க்கிலும், தாங்கள் நீதி என்று கூறும் காரியங்களே நீதியானதும் முதன்மையானதும் என சுமக்கமுடியாத பாரங்களை மனிதர்கள் மேல் சுமத்தினார்கள்.

பாவிகள் பாவச் சேற்றிலே விழுந்து தங்களைத் தாங்கள் அழித்துக் கொண்டிருந்தது உண்மை. ஆனால், அவர்கள் எப்படி அந்த பாவச்சேற்றில் இருந்து வெளியே வரக்கூடும் என்பதை அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை, ஏனெனில், அவர்கள் மதத் தலைவர்களிடம் உதவிக்குச் சென்றால், அவர்கள் நியாந்தீர்க்கப்பட்டு, கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் அல்லது கொலை செய்யப்படுவார்கள். இந்த நிலையிலே மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல, ஜனங்கள் அலைந்து திரிந்து, தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பதை இயேசு கண்டார். தொலைந்து போன ஆடுகளை (பாவத்தில் மூழ்கி விடுதலை பெற வழி தெரியாமல் இருக்கும் தம்முடைய ஜனங்களை) மீட்கும்படியாகவே இந்த பூமிக்கு வந்தேன் என்று பொருள்படும்படியாய் அநேக காரியங்களை வலியுறுத்திக் கூறினார். ஏனெனில், பரிசேயர், சதுசேயர், வேதபாரகர்கள் தாங்கள் பரிசுத்தர்கள் என்றும் நீதி செய்கின்றவர்கள் என்றும் தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொண்டார்கள்.

கருணையின் தெய்வமாகிய இயேசுவோ, பாவிகளை தேடிச் சென்றார். ரோமருக்கு வரி வசூலிப்பதினால் துரோகிகள் என்று கருதப்பட்ட ஆயக்

காரரை தேடிச் சென்றார். அவர்களோடு உணவு உண்டார். அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றார். தேவனுடைய ராஜ்யம் அவர்களுக்கு அருகில் இருப்பதையும், மனந்திரும்புதலின் அவசியத்தையும், மனந்திரும்புதலின் வழியையும், கற்றுக் கொடுத்தார். மனதிரும்ப மனதுள்ளவர்களின் பாவங்களை மன்னித்து அவர்களை பரிசுத்தப்படுத்தினார். அதைக் கண்ட வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோ தமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜன பானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். (லூக்கா 5:30-32)

எனவே, மீட்பின் நற்செய்தியை பெற்றுக் கொண்ட நாங்களோ, “நாங்கள் பரிசுத்தர்” “மீட்பு எங்களுக்கு மட்டுமே உரியது என்றும்” “மற்றவர்கள் யாவரும் பாவிகள்” என்றும் தேவனுடைய மீட்பின் நற்செய்தியை மறைத்து வைக்க முடியாது. இயேசு இந்த உலகத்தைவிட்டு பரலோகத்திற்கு எழுந்தருள முன்பு தம்முடைய சீஷர்களை நோக்கி: நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28: 19-20) மேலும், சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. (2 தீமோ 4:2)

இவைகளை மையமாகக் கொண்டே இன்று பலர் சுவிசேஷத்தை எங்கும் அறிவித்து வருகின்றார்கள். மிகவும் நல்லது! அதே நேரத்திலே, நாங்கள் பெற்ற மீட்பை (இரட்சிப்பு) நிறைவேறும்படிக்காய், இந்த உலகத்தால் நாங்கள் கறைபடாதபடிக்கு, எங்கள் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் பூரண சாயலுக்கு ஒத்த சாயலில் நாம் சம்பூரணராய் வளரவேண்டும்.

தன்னுடைய இரட்சிப்படையாத பழைய நண்பர்களுடன் அவ்வப்போது விருந்து சாலைக்கு சென்று வந்த இளைஞன், அவன் நண்பர்கள் மதுபானம் அருந்தும் போது, இவனோ மென்பானங்களை அருந்திக் கொள்வான். இது அவனுக்கு வழக்கமாயிற்று. இதை கேள்விப்பட்ட சபையின் மூப்பர் அந்த இளைஞனை அழைத்து, தம்பி, நீ உன் பழைய நண்பர்களுடன் விருந்து சாலைகளுக்கு போக்கும் வரத்துமாக இருக்கின்றாய் என்று நான் அறிந்து கொண்டேன், அதன் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன்: நான் இரட்சிப்பின் செய்தியை அறிவிக்காவிட்டால், யார் அவர்களுக்கு கூறுவார்கள்? ஏன், இயேசுவும் பாவிகளோடு உணவு உண்டாரே என்று பதில் கூறினான். அதற்கு அந்த மூப்பர்: இயேசு ஒரு இடத்திற்கு சென்றால், அங்கே அன்றுடன் விடுதலை உண்டாயிருக்கும். இயேசு சென்ற இடமெல்லாம், அவர் பேசும் போது மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அல்லது விடுதலையடையும் வழியைக் குறித்தும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், பாவிகள் கேட்கும் கேள்வி

களுக்கு மறுமொழி கொடுத்தார். இயேசு சென்ற இடங்களிலே, பாவிகள் தங்கள் இளமை நாட்களின் குறும்புத்தனமான காரியங்களையும், வாலிபத்தின் பழைய பாவங்களையும் பற்றி பேசி, வெறி கொண்டு, கேளிக்கை செய்யும் போது, அவர் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, நீ இப்படியெல்லாம் இயேசுவைப் போல் செய்கின்றாயா? என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன்: தன்னுடைய நண்பர்கள் ஒழுக்க முள்ளவர்கள் என பதில் கூறினான். நீ பெற்ற விலைமதிக்க முடியாத இரட்சிப்பை காத்துக் கொள்வது உன்னுடைய தீர்மானம். நெறிகெட்ட சம்பாஷணைகளுக்கும், அவலெட்சணமான காட்சிகளுக்கும், உலகத்தின் களியாட்டங்களுக்கும் நீ பழக்கமடைந்தால், பாவத்தைக் குறித்த உணர்வு உன்னிடத்தில் இருக்காது. உன் இருதயம் கடினப்பட்டு போய்விடும். இரட்சிப்பின் பெறுமதியை குறித்த உணர்வும் அருகிக் கொண்டு போய் விடும். எனவே எச்சரிக்கையாக இரு என்று அறிவுரை கூறினார்.

எங்கள் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து வேதத்திலே பல ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளது. உலக போக்குகளையும், உலக போக்குகளுக்குள் எங்களை கொண்டு செல்லக்கூடிய ஊடகங்களையும் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இரட்சிப்படையாத பழைய நண்பர்களையும், உறவினரையும் நாங்கள் வெறுத்துத் தள்ள முடியாது. ஆனால் அதே வேளையில், உலக போக்குகளோடும், விக்கிரக ஆராதனைகளோடும் எங்களை தொடர்புபடுத்தக் கூடிய ஊடகமாக அவர்களை நாம் வைத்துக் கொள்ளக் கூடாது. கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல சாத்தான் எப்போதும் யாரை விழுங்கலாம் என்று வகை தேடித்திரிகின்றான். அவனுக்கு வேண்டியதெல்லாம், எங்கள் வாழ்விலுள்ள ஒரு சின்ன இடைவெளி, ஒரு சிறிய பழைய பாவம், உலக போக்குக்கின்படி வாழும் மனிதர்களோடு எங்களுக்கு உள்ள உறவு. அவைகள் யாவற்றையும் தகுந்த நேரத்தில் எங்கள் சாட்சியை நாங்கள் இழந்து போகத்தக்க கருவியாக பயன்படுத்துவான்.

எங்கள் தேவன் இவையெல்லாவற்றிற்கும் பெரியவர் என்று சிலர் சொல்லிக் கொள்வார்கள். அவர் பெரியவராக இருப்பதினால்தான் சாத்தானின் தந்திரமான வலைகளைக் குறித்து எங்களுக்கு எச்சரிப்பை வழங்கி இருக்கின்றார். எங்கள் தேவன் ஒரு போதும் கைவிட மாட்டார் என்று சிலர் சொல்லிக் கொள்வார்கள். எங்கள் தேவன் ஒருபோதும் கைவிடவும் மாட்டார், விலகவும் மாட்டார் ஆனால் நாங்கள் அவரை கைவிட்டு விலகிப்போகக்கூடாது.

பன்றியோடு நட்பு வைத்த ஆட்டிக்குட்டி சேற்றினருகே பன்றியோடு விளையாடி வந்தது. ஆரம்பத்திலே, அந்த சேற்றின் துர்நாற்றத்தை அந்த ஆட்டிக்குட்டிக்கு சகிக்க முடியவில்லை ஆனால் காலப்போக்கில் அந்த நாற்றம் அந்த ஆட்டிற்கு பழக்கப்பட்டாயிற்று. சேற்றிற்குள் வா என்று ஒரு நாள் கூட அந்த பன்றி அந்த ஆட்டை கேட்கவில்லை. நாட்கள் கடந்து சென்றதும், ஒரு நாள் அந்த ஆட்டுக்குட்டி இவ்வண்ணமாக சிந்தித்தது: சேற்றின் நாற்றம் பழக்கப்பட்டாயிற்று, பன்றிகளோடு தினமும் விளையாடியதால் சுற்றாடல் எல்லாம் பிழையாக தோன்றவில்லை, எனவே ஒரு முறை சேற்றிற்குள் இறங்கினால் என்ன என்று கூறி, சேற்றிற்குள் பாய்ந்து விட்டது. இவ்வண்ணமாக தொலைந்து போன ஆடுகளுக்கு ஒப்பாகவே பாவிகளும், பாவ வாழ்க்கையில் சிக்

கிக் கொண்டார்கள். அதிலிருந்து விடுதலையைக் கொடுக்கும்படியாகவே இயேசு அவர்களை தேடிச் சென்றார். இப்படியாகவே எங்களையும் பாவ சேற்றில் இருந்து தூக்கிவிட்டார். ஆனால், மறுபடியும் அந்த சேற்றின் அருகே போக்கும் வரத்துமாக இருக்கப் போகின்றேன் என்று நான் தீர் மானம் செய்தால், காலப்போக்கில் அது எனக்கு கண்ணியாக மாறி விடும்.

இந்த உலகிலே நாங்கள் என்ன செய்கின்றோம் என்று, எங்கள் புதிய நண்பர்கள்,பழைய நண்பர்கள், உறவினர், பெற்றோர், பிள்ளைகள், கண வன், மனைவி, பேரப்பிள்ளைகள், அயலவர்கள், சக வேலையாட்கள், ஆசிரியர்கள், சக விசுவாசிகள், எங்கள் வேலையிலுள்ள எஜமான்கள் இப்படியாக யாவரும் எங்களைப் பார்க்கின்றார்கள். அவர்கள் மட்டும ல்ல, சாத்தானும் எங்களைப் பார்க்கின்றான். எங்களை மீட்க எங்களு க்காக தம்முடைய இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே பலியான அருமை இயேசுவும் எங்களை நோக்கிப் பார்க்கின்றார். இந்த பட்டியலில் யாரை பிரியப்படுத்தப் போகின்றீர்கள்? யாருக்கு சாட்டுப் போக்கு சொல்லப் போகின்றீர்கள்? இது உங்களுடைய தீர்மானம். எங்களை நோக்கி பார்க்கும் எங்கள் பிள்ளைகளுக்கு தவறான முன் உதாரணமாக அல்ல தேவன் விரும்பும் முன் உதாரணமாக நாங்கள் இருக்க வேண்டும். நாங்கள் எங்கு செல்கின்றோம், என்ன செய்கின்றோம் என்பதை பார் க்கும் எங்கள் பிள்ளைகளும் அந்த சுற்றாடல்களுக்குத் தாமே பழக்க மடைந்து விடுவார்கள்.

இந்த கட்டுரையில் இளைஞர் ஒருவர் உதாரணமாக குறிப்பிடப்பட்டு ள்ளார். ஆனால் பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு வயதெல்லை இல்லை. இன்று பலர் “எனக்கு வயதாகிவிட்டது, வாழ்ந்து முடித்துவிட்டேன். நான் எதை பார்த்தாலும், எதைக் கேட்டாலும், எதை வாசித்தாலும், எதைப் பேசினாலும் பறவாயில்லை” என்று கூறிக் கொள்கின்றார்கள். அப்படிய ல்ல! பாவம் பாவமே. பாவத்திற்கு வயதெல்லை இல்லை. உங்கள் சரீரம் செத்ததாக இருந்தாலும், உங்கள் ஆத்துமா இளமையாகவே இரு க்கின்றது. இவ்வளவு ஆண்டுகளாக காத்து வந்த ஆத்துமாவை கெடு த்துப் போடாதிருங்கள். தேவன் தந்த சுதந்திரத்தை எங்கள் இச்சை களை நிறைவேற்ற தவறான முறையில் உபயோகிக்கக் கூடாது. ஆகாத சம்பாஷணைகள், வீண்பேச்சுக்கள் யாவும் எங்கள் தூய வாழ் வைக் கெடுத்துப் போடும். எங்கள் கையிலிருக்கும் தொலைபேசி மற் றும் இன்ரநெற் ஊடகங்கள் வழியாக கேளிக்கை விடுதிகளை எங்கள் வீட்டிற்குள் கொண்டுவரக் கூடாது. பாவம் இன்று அந்த அளவிற்கு மலி ந்து போய் கிடைக்கின்றது.

மோசம் போகாதிருங்கள்,தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார் மனு ஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கெ ன்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலா 6:7-9).

நாங்கள் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி, எங்கள் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்தால், அதனால் ஒரு பலனும் இல்லை.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : யோவான் 14:1

நாளாந்தம் உற்சாகத்துடன் ஓடி விளையாடி வரும் பிள்ளை, ஒரு நாள் சோர்வுற்று அமர்ந்திருந்தால், அந்த பிள்ளையின் பெற்றோர், அதைக் குறித்து மிகவும் கரிசனையுள்ளவர்களாக இருப்பார்கள். பிள்ளைக்கு ஏதாவது நோயின் அறிகுறிகள் தென்படுகின்றதா? உடற்சுகம் குறைவுபட்டிருக்கின்றதா? அப்படியாக அந்த பிள்ளை சோர்ந்திருப்பதற்கு காரணம் என்ன என்பதை அலசி ஆராய்வார்கள். எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலும் நாங்கள் தேவனுக்கென்று உற்சாகமாக செய்து வந்த கிரியைகளை விட்டுவிடுவோமாக இருந்தால், நாங்களும் எங்களுடைய வாழ்கையை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மனக்குழப்பங்களால் வாழ்க்கையில் சமாதானத்தை இழந்திருக்கும் நிலையில் இன்று நாங்கள் காணப்படுவோம் என்றால், முதலாவதாக நாங்கள் சற்று தரித்திருந்து சிந்திக்க வேண்டும். என் சமாதானத்தின் குறைவிற்கு மூல காரணம் என்ன? என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகின்றேன் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். எங்களுடைய கர்த்தரைவிட பெரியவர்கள் யாருமில்லை. இம்மையிலும் மறுமையிலும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். அவரை மேற்கொள்ளக் கூடிய பிரச்சனைகளும் ஒன்றுமில்லை. எனவே, தேவன் எங்களுக்குத் தந்த சமாதானத்தை எங்களைத் தவிர வேறு யாரும் குழப்ப முடியாது. அதாவது எங்கள் குழப்பங்கள் எங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளும்படிக்கு நாம் இடம் கொடுத்தால் ஒழிய எங்கள் சமாதானத்தை யாரும் பறித்துக் கொள்ள முடியாது.

ஒரு சமயம், இயேசுவின் சீஷர்கள் சென்று கொண்டிருந்த படவு, நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக கடலின்மேல் நடந்தான். ஆனால், காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். அதாவது, அவன் கர்த்தர் கொடுத்த கட்டளையை மறந்து சூழ்நிலைகளை நோக்கிப் பார்க்கும் போது அவன் கலக்கமடைந்தான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப்பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.

நாங்களும் கர்த்தரை நோக்கி பார்க்காமல், அவர் எங்களுக்கு கொடுத்த வார்த்தையை மறந்து, எங்கள் சூழ்நிலைகளை கண்டு கலங்கும் போது, நாங்கள் எங்கள் சமாதானத்தை இழந்து போய்விடுகின்றோம். நான் நித்திய வாழ்வு அடையும்படிக்காகவே என்னுடைய கர்த்தர் எனக்காக சிலுவையிலே பலியானார். அவர் என்னை அன்பு செய்கின்றார். எனவே, அவரை அறியாமல் எனக்கு ஒன்றும் நேரிடாது என்ற விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்.

என்னுடைய வாழ்க்கையிலே பெலவீனங்கள் உண்டு. என்னுடைய வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. நிர்ப்பந்தமான மனிதன் நான், இந்த பாவ சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்கக் கூடும் என்று ஊழியராகிய பவுல் கூறினார். பவுல் என்னும் தேவ ஊழியர், அவர் முன்பு பின்பற்றியிருந்த யூத மதச் சட்டங்களின்படி எந்தக் குற்றமும் செய்யாதவர். சமுக அந்தஸ்து உடையவர். வேத பிரமாணங்களை முறைப்படி கற்றவர் எனினும் அதினாலே உண்டாகும் சுய நீதியின் நிமித்தம் அவர் மனத்திருப்தியை காணவில்லை. ஆனால், இயேசு கிறிஸ்துவின் மேல் கொண்டுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதியிலே அவர் மனரம்யமாக இருந்தார்.

எங்கள் கிரியைகளினால் உண்டாகும் சுய நீதி எங்களை பாவத்திலிருந்து விடுதலையாக்கவில்லை. எங்கள் கிரியைகளிலே சமாதானம் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்து வழியாக உண்டாகும் ஜீவனுள்ள கிருபை எங்களை பாவம் மரணம் என்னும் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்குகின்றது. அந்த கிருபையானது, நாங்கள் சிந்திக்கும் முறைகளை மாற்றி, எங்களை நாளுக்கு நாள் மறுரூபப்படுத்துகின்றது.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று எங்களை அன்பு செய்யும் இயேசு கூறியிருக்கின்றார்.

நானும் நீங்களும் மற்ற யாவரும் இந்தக் கிருபையை பெற்றுக் கொள்ளும்படியாகவே, மனித குலத்தின் பாவ சாபத்தை தம்மேல் ஏற்றுக் கொண்டு, தம்மைத் தாமே சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுத்து, எங்கள் ஆக்கினையை தம்மேல் சுமந்து கொண்டு, மரணத்தை ஜெயித்தார். அவர் ஒருபோதும் எங்களை கைவிடமாட்டார்.

எனவே சூழ்ந்து நெருக்கும் பிரச்சனைகளின் மேல் கண்களை பதிய வைக்காமல், விசுவாசத்தோடு எங்கள் கர்த்தராகிய இயேசுவை நோக்கி பார்ப்போம். அவர் தருகின்ற சமாதானம் நித்தியமானது.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

# தர்க்கிப்பை விட்டுவிடுங்கள்

எங்கள் பிள்ளைகளில் ஒருவர், வீட்டில் பல வேலைகளை செய்தாலும், அதை முறுமுறுப்போடே செய்தால் அதை முழுமையாக ஏற்றுக் கொள்வீர்களா? "நான் மட்டும் தானா வேலை செய்ய வேண்டும்" "வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு இதைக் குறித்து அக்கறை இல்லையா" இப்படியாக பலவிதமான முறைப்பாடுகள் பிள்ளைகளிடமிருந்து வருவதுண்டு. பிள்ளைகள் இப்படியாக முறுமுறுப்போடே வேலை செய்து வந்தாலும், ஒரு நாளில் அவர்கள் அந்த முறுமுறுப்பைவிட்டு, விவாதங்களை விட்டு ஓய்ந்து முழுமனதோடே தங்கள் நாளாந்த அலுவல்களை "இது என்னுடைய வீடு" "இது என்னுடைய குடும்பம்" என்ற உணர்வோடு செய்யும் நிலைக்கு வளர்ந்து வருவார்கள் என்பதே பெற்றோரின் ஏக்கம். தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்டவர்களாகிய நாங்களும், முழுமனதோடு கர்த்தருக்கென்று சேவை செய்ய வேண்டும். எப்போதும் தேவனுடைய ஊழியங்களுக்கு அனுசரணையாகவும், ஒத்தாசையாகவும் இருக்க வேண்டும். இருள் நிறைந்த இவ் உலகத்திலே, குறைகள் மலிந்திருக்கின்றது. நாங்களோ நிறைவு உண்டாகும்படிக்கு, ஒளிவீசும் சுடர்களாக அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே, நாங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்ய வேண்டும் சில வேளைகளிலே, எங்களை சுற்றி நடைபெறும் காரியங்களை உற்று நோக்குவதால், நாங்கள் எங்களை அறியாமலே, சிறு பிள்ளைகளைப் போல முறுமுறுக்க ஆரம்பித்து விடுகின்றோம். அப்படி நாங்கள் செய்யும் போது, நாங்கள் செய்யும் கிரியைகளால் நிறைவு உண்டாவதில்லை. நாங்கள் எதைச் செய்தாலும், தேவனுக்கென்று முழுமனதோடு செய்ய வேண்டும். ஒரு வேளை நாங்கள் செய்து வரும் உதவி ஊழியங்கள், மனிதர்களுடைய பார்வையிலே அற்பமான காரியங்களாக இருக்கலாம் அல்லது பெரிய காரியம் என்று கருதப்படலாம். எவை எப்படியாக இருந்தாலும், நாங்கள் பெற்ற பணியை மனநிறைவோடு செய்து, தேவனுடைய பூரண சித்தத்தை எங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவதே எங்கள் நோக்க மாக இருக்க வேண்டும்.

**பிலிப்பியர் 2:16**

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பரலோக தேவனே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கமால், இயேசுவைப் போல என்னைத் தாழ்த்தி, மன நிறைவோடு பெற்ற பணியை செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஐப்பசி 2

📖 மாலை வாசகம் - எபிரெயர் 12:1-2

# ஆதி நிலைக்குத் திரும்புங்கள்

“உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாம த்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்” என்று எபேசு என்னும் சபைக்கு கர்த்தராகிய இயேசுதாமே செய்தி அனுப்பினார். அந்நாட்களில் மாத்திரமல்ல, இந்நாட்களிலும் நாங்கள் ஆங்காங்கே இப்படிப்பட்ட நிலைமைகளை காணக்கூடியதாக இருக்கின்றது. சிலர், மற்றவர்களை திருத்த வேண்டும் என்று, தங்களுக்கடுத்த அலுவல்களில் தலையிட்டு, தாங்கள் பெற்ற மகத்துவமான இரட்சிப்பை காத்துக் கொள்ள மறந்து விடுகின்றார்கள். இதன் விளைவாக தேவனுடைய பிள்ளைகள் பின்னிட்டு, இளைப்படைந்து சோர்ந்து போய்விடக் கூடிய சாத்தியங்கள் உண்டு. இவ்வண்ணமாகவே, எபேசு சபையிலே இருந்த தேவ பக்தர்கள், தேவனை அறிந்த நாட்களிலே, தேவன்மேல் கொண்ட அன்பை விட்டு வழுவிப் போனார்கள். அவர்கள் நீதியின் கிரியைகளைவிட்டும் ஓய்ந்து போய்விடுகின்றார்கள். இங்கே இரண்டு சாராரைக் காண்கின்றோம். ஒரு சாரார் பொல்லாதவர்கள், பொய்யர்கள், வேதப்புரட்டர்கள். இன்னுமொரு சாரார் தேவனைச் சார்ந்து தேவனுக்கென்று உண்மையாக பிரயாசப்பட்டவர்கள். ஆனால் இப்போது சற்று பின்னிட்டிருக்கின்றார்கள். கர்த்தராகிய இயேசு தமக்கென்று உண்மையாய் பிரயாசப்பட்டவர்களுக்கே செய்தியை அனுப்புகின்றார். அவர்கள் கர்த்தருக்கென்று வேறுபிரிக்கப்பட்டவர்கள். அவர்கள் செய்த எல்லா நற்கிரியைகளையும், அவர்களின் பொறுமையையும் அறிந்திருக்கின்றார். அதுபோலவே எங்கள் நிலைமையும் அவர் நன்கு அறிந்திருக்கின்றார். ஒரு வேளை எங்களை சூழ நடக்கும் அநீதியின் கிரியைகள் எங்களை சோர்வடையச் செய்யலாம். ஆனால் நாங்கள் வேதப்புரட்டர்களை பார்த்து சோர்ந்து போகாமல், ஆரம்பத்திலே தேவன் பேரில் கொண்ட அன்பிற்கு திரும்ப வேண்டும் என்று ஆவியானவர் சபைகளுக்கு சொல்லும் செய்திக்கு கீழ்ப்படிந்து, தொடர்ந்து முன்னேறுவோம்.

**வெளிப்படுத்தல் 2:7**

**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த சர்வ வல்லவரே, ஆதி நிலைக்குத் திரும்பும்படியாய் தேவ ஆவியானவர் கூறும் செய்திக்கு கீழ்ப்படிந்து, இன்னும் அதிகதிமாக செயற்படத்தக்கதாக எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவர்

*ஊரிலே வசிக்கும் தீங்கை பிணைக்கிறவர்களில் சிலர் என்னுடன் சண்டைக்கு வருகின்றார்கள் என்று ஒரு இளைஞன் தன் தந்தையிடம் கூறினான். தந்தை தன் மகனை நோக்கி: மகனே, நீ அவர்கள் என்ன செய்தாலும் அவர்களை எதிர்த்து சண்டைக்கு போகக்கூடாது. நீ உன் நன்நடத்தையை காத்துக் கொள். அவர்கள் வழிகளைவிட்டு உன்னைத் தூரப்படுத்திக் கொள் என்று கூறினார். எங்களை நேசிக்குத் எங்கள் பரம பிதாவும் அவ்வண்ணமாகவே, தேவ பிரமாணங்களை நன்கு அறிந்திருந்தும் அவைகளை அசட்டை செய்து வாழும் ஜனங்கள் மத்தியில் எங்கள் இரட்சிப்பை காத்துக் கொள்ளும்படிக்காய் அறிவுரை கூறுகின்றார். குற்றம் செய்தவர்கள் தண்டனையைப் பெறாமல் இருக்க, நாங்கள் ஏன் அவர்கள் குற்றங்களை சகிக்க வேண்டும்? ஏன் தேவன் அவர்களை உடனடியாக தண்டிக்கக் கூடாது? ஏனென்றால் ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி தீர்மானம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9) துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ?அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (எசேக்கியேல் 18:23). கர்த்தர் தம்முடைய ஜனத்தை நோக்கி: நான் உங்களில் அவனவனை, அவனவன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள் அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை. அக்கிரமக்காரருடைய ஆத்துமா நித்திய மரணத்தை (சாவை) அடைவதை தேவன் விரும்பவில்லை. எனவே எங்கள் பரம தந்தை நீடிய பொறுமையுள்ளவராக இருப்பது போல, அவருடைய பிள்ளைகளாகிய நாங்களும் அவருடைய நீதி நிறைவேறும் வரைக்கும் நீடிய பொறுமையுள்ளவர்களாக இருப்போம்.*

**எசேக்கியேல் 18:32**

மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறார்.

**ஜெபம்**: நீதியின் தேவனே, துன்மார்க்கரின் பொல்லாத கிரியைகளை கண்டு குழப்படையாமல், உம்முடைய நீதி நிறைவேறும் நாள்வரைக்கும் நாங்கள் பொறுமையாய் இருக்க பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | ஐப்பசி 4** 📖 மாலை வாசகம் – எபிரெயர் 12:15

# ஒன்றையே சிந்தியுங்கள்...

“பிரித்து ஆட்சி செய்வோம்” (Divide and rule) என்ற பதத்தை ஒரு வேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அதாவது, முற்காலங்களிலே, பல ராஜ்யங்களை ஆளும் அரசர்கள், தாங்கள் ஆளும் ராஜ்யங்களின் ஜனங்கள் ஒருமித்து தங்களுக்கு எதிராக கலகம் பண்ணாதபடிக்கு, அவர்கள் மத்தியிலே வேற்றுமைகளை உண்டு பண்ணிவிடுவார்கள். அதனால், அந்த ராஜ்யங்கள் எந்த ஒருவிடயத்திலும் ஒருமனப்பட மாட்டார்கள், அவர்கள் மத்தியிலே ஐக்கியம் என்ற சொல்லிற்கு இடமிருக்காது. மேற்கூறிய விடயம் ஒரு குடும்பத்தை எப்படி வலுவிழக்கப் பண்ணிவிடுகின்றது என்பதை சற்று ஆராய்ந்து பாருங்கள். உதாரணமாக ஒரு குடும்பத்தில் நாலு சகோதரர்கள் இருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியாளர்களாக இருந்தால், ஒருவர் செய்யும் நல்லாக்கத்திற்கு மற்றய மூவரும் எதிர்த்து நிற்பார்கள். அந்த நல்ல ஆக்கம் கைகூடாதபடி எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று பிரயாசப்படுவார்கள். இதனால் அந்த குடும்பம் வளர்ந்து பெருக மாட்டாமல், குன்றிப்போய்விடுகின்றது. “பிரித்து ஆட்சி செய்வோம்” என்பது “ஒன்று பட்டால் உண்டு வாழ்வு” என்ற கதைக்கு முரணானது. எனவே பிரிவினையுள்ள எந்த ஒரு குழுவின் ஆக்கத்தையும் உடைத்து விடுவது, அந்த குழுவின் எதிரிக்கு இலகுவானது. இந்த கூற்றிற்கு, நாங்கள் கூடி ஆராதிக்கும் ஐக்கியம் விதிவிலக்கானதல்ல. பிரிவினை என்னும் சிறிதான கசப்பான வேர் எங்கள் இருதயத்தில் தோன்று முன்னமே, தேவனுக்கு எதிரான அந்த மாம்சத்தின் எண்ணத்தை, இயேசுவின் நாமத்தில் கடிந்து கொண்டு, முற்றாக அகற்றிவிட வேண்டும். ஏனெனில் எங்கள் சிந்தைகள் வேறுபட்டிருக்க முடியாது. அவரவர் குடும்பத்தில் போட்டி மனப்பான்மை இருக்கலாகாது. அவரவர் சபையில் போட்டி மனப்பான்மை இருக்கலாகாது. அதே போல சபைகளுக்கு மத்தியிலும் போட்டி மனப்பான்மை இருக்கலாகாது. பிதவாகிய தேவனுடைய சித்தம் எங்கள் வாழ்வில் நிறைவேறும்படிக்கு கிறிஸ்துவுக்குள் ஒருமனதோடு பணி செய்து முன்னேறுவோம்.

**பிலிப்பியர் 2:2**

**நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையுள்ளவர்களாகவும், இசைந்த ஆத்துமாக்களாகவும், ஒருமனதுடன், பெற்ற பணியை செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒன்று சேர்ந்து ஜெபிப்போம்

கர்த்தராகிய இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே, ஒரு சமயம் அவரும் அவருடைய சீஷர்களும் ஆகாரம் உண்பதற்கு நேரம் இல்லாதபடிக்கு ஜனங்கள், இயேசு தங்கியிருந்த வீட்டிற்கு கூட சென்றார்கள். அந்நாட்களிலே யூத மத பிரமாணங்களில் பாண்டித்தியம் பெற்ற வேதபாரகர் என்னும் குழுவினர் இயேசு செய்து வந்த அற்புதங்களை கண்டு எரிச்சலடைந்ததால், இவன் பெயெல்செபூலைக்கொண்டிருக்கிறான். பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: சாத்தானைச் சாத்தான் துரத்துவது எப்படி? ஒரு ராஜ்யம் தனக்குதானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே. ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே. சாத்தான் தனக்குத் தானே விரோதமாக எழும்பிப் பிரிந்திருந்தால், அவன் நிலைநிற்கமாட்டாமல், அழிந்துபோவானே என்றார். ஆம் பிரியமானவர்களே, சாத்தனுடைய ராஜ்யம் அவனுக்குள் ஒன்றாய் இருக்கின்றது. மனிதர்களை வஞ்சித்து தேவனிடம் இருந்து அவர்களை பிரிப்பதிலும், மனிதர்கள் மத்தியிலே பிரிவினைகளை உண்டாக்கி, அவர்கள் மத்தியிலே கலகங்களை கிளப்பி, தேவ சித்தம் அவர்கள் வாழ்வில் நிறைவேறாதிருக்க வேண்டும் என்பதிலும் சாத்தனுடைய ராஜ்யம் ஒன்றுபட்டிருக்கின்றது. தேவனுடைய வீடு, தேவனுடைய வீட்டாருக்கு எதிராக இருக்க முடியுமோ? இல்லை அப்படி இருக்க மாட்டாது! தேவனுடைய ராஜ்யம் தனக்குள் தானே பிரிந்திருக்க கூடுமோ? இல்லை. தேவ ஜனம் ஒருமனப்பட்டு ஐக்கியமாக இருக்கும் இடத்திலே தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்கின்றார். தேவ ஜனங்கள் இசைந்திருக்கும் இடத்தில் தேவ ஆவியானர் ஆளுகை செய்கின்றார். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் இயேசுவின் நாமத்தினால் ஒருமனப்பட்டிருக்கின்றார்களோ, அவர்கள் மத்தியிலே இயேசு பிரசன்னமாய் இருக்கிறார். ஒருமனமும் ஐக்கியமும் தேவனுடைய ராஜ்யத்தின் சிறப்பம்சம். இந்த சிறப்பை, எங்கள் மத்தியிலே, சாத்தான் குலைத்துப் போடாமல் சாத்தானின் அரண்களை தகர்த்தெறியும்படி இயேசுவின் நாமத்தில் ஒருமனப்பட்டு, ஜெபம் செய்யுங்கள்.

**மாற்கு 3:24**

ஒரு ராஜ்யம் தனக்கு தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, சாத்தானின் வஞ்சகமான பிரிவினைகளின் கண்ணிகளை தகர்த்தெறியும்படிக்கு ஊக்கமாக ஒருமனப்பட்டு ஜெபிக்கும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் செய்து முடிப்பார்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த நாட்களில் அதிகதிமாக ஒரு மனதையும், ஐக்கியத்தைக் குறித்தும் அதிகமாக தியானித்து, தேவ ஜனங்கள் மத்தியிலே ஒருமனமும் ஐக்கியமும் பெருகும்படிக்கு தினமும் ஜெபம் செய்யுங்கள். தேவ ஊழியராகிய பவுல் வழியாக எழுதப்பட்ட பதின்மூன்று (13) நிருபங்களில் ஒன்று பிலிப்பியர் நிருபமாகும். அப்போஸ்தலராகிய பவுல், கிறிஸ்துவின் நற்செய்தியை (பாவத்திலிருந்து விடுதலை அடையும் வழி, பூமியில் சமாதானமான வாழ்வு, பரலோகத்திலே முடிவில்லாத வாழ்வு) அறிவித்ததின் நிமித்தமாக சிறையிலே போடப்பட்டிருந்தார். அங்கிருந்து இந்த அழகான நிருபத்தை (கடிதம்) எழுதும்படியாக தேவ ஆவியானவர் வழியாக வழிநடத்தப்பட்டார். அதன் கடைசி அதிகாரமாகிய 4ம் அதிகாரத்தின் முதற்பகுதியிலே எயோதியாள், சிந்திக்கேயாள் என்பவர்களை ஏகசிந்தையுள்ளவர்களாக இருக்கும்படி புத்தி கூறுகின்றார். யார் இந்த எயோதியாளும் சிந்திக்கேயாளும்? வேதப்புரட்டர்களா? இல்லை! சபையை குழப்பி வந்தவர்களா? இல்லை! அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. (பிலி 4:3). ஆம் பிரியமானவர்களே, பிரிவினையின் வித்துக்கள் தேவனுடைய ராஜ்யத்திற்காக வலுவாக பிரயாசப்படும் பரிசுத்தவான்கள் மத்தியிலும் தோன்றலாம். எயோதியாள், சிந்திக்கேயாள் என்பர்களின் நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. ஆனாலும் ஏதோ சில காரணங்களால் அவர்கள் ஏகசிந்தை அற்றவர்களாக மாறிவிட்டார்கள். அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி அங்கிருந்தவர்களை பவுல் வேண்டிக் கொண்டார். எங்களுக்குள்ளும் இப்படியான நிலைமைகள் உருவாகும் போது, ஒருவரை ஒருவர் சபிக்காமல், ஒன்றுக்கும் கவலையடையாமல், நாங்கள் ஒருவருக்காக ஒருவர் தேவனை நோக்கி வேண்டிக் கொள்ள வேண்டும். எங்களை அழைத்த தேவன், இன்னும் பலரையும் அழைத்திருக்கின்றார். உண்மையுள்ள தேவன், எல்லாவற்றையும் நடத்தி முடிப்பார் என்ற ஏகசிந்தை எங்கள் மத்தியிலே எப்போதும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

**பிலிப்பியர் 4:2**

**கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்.**

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, நீர் வாக்குரைத்தபடி செய்து முடிப்பவர் என்பதை எப்போதும் உறுதியாய் விசுவாசித்து, என் வாழ்வில் உம்முடைய நீதி நிறைவேறும்படி பொறுமையாய் இருக்க பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கலகம் வேண்டாம்

குறிப்பட்ட ஒரு இடத்திலே ஏதோ காரணத்திற்காக கலகம் ஏற்பட்டுவிட்டது. தன்னை பொறுமைசாலி என்றும், சமாதான தொண்டர் என்றும், நீதி நியாயங்களை விரும்புகின்றவர் என்றும் எண்ணிக் கொண்ட மனிதன், அந்த இடத்திற்கு தற்செயலாக வந்த போது, கலகத்தினால் ஒருவரோடொருவர் வாக்குவாதம் செய்வதை கண்டபோது, கடும் கோபம் கொண்டார். அதனால் அந்த இடத்திலே பெரிதான சத்தம் போட்டு அந்த ஜனங்களை கடுமையாகக் கடிந்து கொண்டார். ஏற்கனவே, மனவேதனையோடு, இருந்த ஜனங்கள், இந்த மனிதனின் சத்தத்தினாலே இன்னும் அதிக கோபம் கொண்டதினிமித்தம், கலகம் இன்னும் அதிகமாக பெருகிவிட்டது. பிரியமானவர்களே, இதன் கருப்பொருளாவது, எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுபவர்களாக நாங்கள் மாறிவிடக்கூடாது. சில வேளைகளிலே எங்களை சூழ நடக்கும் சம்பவங்கள் விரும்பப்படத்தக்கதல்ல. அதனால் உடனடியாக நிலை தவறி குழப்பமடைந்துவிடக் கூடாது. தேவ ஊழியராகிய பவுல் கூறியதைப் போல, "நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." ஆம்! எந்த விதத்திலும் நாங்கள் பிரிவினைக்கு காரணராக மாறிவிடக்கூடாது. மனதில் குழப்பம் ஏற்பட்டால், முதலாவதாக, எங்கள் வார்த்தை பிரயோகத்தை நிறுத்த வேண்டும். பின்பு, மேற்கொண்டு எந்த ஒரு அடியும் எடுத்து வைக்க முன்பு, தேவனுடைய பாதத்திலே ஜெபத்திலே தரித்திருப்பதே சாலச் சிறந்தது. பின்பு, நிதானமுள்ள ஆவியோடு, உங்கள் போதகரை அணுகி தயவாய் உங்கள் பிரச்சனைகளைக் கூறுங்கள் அல்லது தேவ சித்தம் நிறைவேறும்படி ஊக்கமாக ஜெபிப்பவர்களுடன் பேசுங்கள் அல்லது தேவனுடைய குறித்த நேரம் வரும்வரைக்கும், அவருடைய பாதத்திலே சகலவற்றையும் ஒப்புக்கொடுத்து தினமும் ஜெபம் செய்யுங்கள். எந்த ஒரு காரணத்தினாலும் மற்றவர்களையோ, சபையையோ குழப்புகின்றவர்களாக மாறிவிடாதிருங்கள். சமாதானம் பண்ணுகின்றவர்களே தேவனுடைய புத்திரர்கள்.

**எபேசியர் 4:3**

**சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என்னுடைய பேச்சினாலோ, கிரியைகளினாலோ யாதொரு கலகத்தையும் எழுப்பிவிடாதபடிக்கு, சாந்தத்தோடும் பொறுமையோடும் உம்மில் நிலைத்திருக்க அருள் புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஐப்பசி 8 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 20:7–8

# என் பெலனான கர்த்தர்

இந்த உலகிலே மனிதர்கள் தங்கள், தங்கள் பெலனை பல வழிகளிலே காண்பித்து வருகின்றார்கள். உடற்பெலன் உள்ளவர்கள், அதிகாரத்தினால் பெலத்தவர்கள், ஐசுவரியத்தினால் பெலனடைந்தவர்கள், மற்றும் கல்வி, சமுதாய அந்தஸ்து உள்ளவர்கள். இன்னும் சிலர் துன்மார்க்க வழிகளினால் பெலனடைகின்றார்கள். இவை யாவும் நித்தியமாய் மனிதர்களிடம் நிலைத்திருப்பதில்லை. எடுத்துக் காட்டாக, இளவயதில் உடற்பலத்தில் நம்பியிருந்தவர்கள், வயது கடந்து செல்லும் போது அவர்களது பெலன் குறைந்து போகின்றது. மேற்கூறிய காரியங்களினால் உண்டாகும் பெலன் இந்த உலகத்தோடு அழிந்து போகும் பெலன். இவைகளினாலே தேவனிடத்திலிருந்து மனிதன் எதையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஒரு பெலவானின் பெலன் என்ன? மனக் குழப்பத்தின் நாட்களிலே தன் சரீர பெலனை வெளிக்காட்டுவதா? அல்லது குழப்பத்தின் நாட்களிலே சாந்த குணத்தை வெளிக்காட்டுவதா? யுத்த நாளிலே மனிதனுடைய புய பெலன் அவனுக்கு வெற்றியை கொடுக்குமோ? குதிரை வீரர்களால் வெற்றி சாத்தியமாகுமோ? படைப் பெலத்தினால் வீம்பு பேசுகின்றவர்கள் வெற்றி பெறுவார்களோ? ஆபத்து நாளிலே ஐசுவரியம் உதவுமோ? மரணான நாளிலே கல்வி மனிதனை இரட்சிக்குமோ? இல்லை! இவை மனிதனுடைய உயிருள்ள நாட்களில் அவனுக்கு திருப்த்தியை கொடுப்பதுமில்லை, அவருடைய மரண நாளிலே நித்திய வாழ்வின் நம்பிக்கையை தருவதுமில்லை. எங்கள் ஆவி அமைதலாக எப்போதும் தேவனுடைய வல்லமையில் தங்கி இருக்க வேண்டும். அவரையே எங்களுடைய வாழ்வின் திட நம்பிக்கையாக கொண்டிருக்க வேண்டும். அங்கேயே மனிதனுடைய உண்மையான பெலன் இருக்கின்றது. அந்த பெலன், இந்த பூமியிலே அவன் உயிர் வாழும் நாட்களில் மனத்திருப்த்தியையும், அவன் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் போது, நித்திய வாழ்வின் உறுதியையும் அவனுக்கு கொடுக்கின்றது. தேவன் மேல் பெலன் கொள்ளும் மனிதர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பெலத்தின் மேல் பெலனடைந்து பரம சீயோனைக் காண்பார்கள்.

**ஏசாயா 30:15**

**அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய வார்த்தையை நான் நம்பி, அதைப் பற்றிக் கொண்டு, அதன்படி வாழ்ந்து, உம்மிலே பெலன் கொள்ளும் பிள்ளையாக இருக்க என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சலிப்படையாத நற்கிரியைகள்

ஒரு ஊரிலே பல வருடங்களாக வாழ்ந்து வந்த மனிதன், எப்போதும் தான் கடந்து செல்லும் பாதையில் காணப்படும் குப்பை கூளங்கள், மற்றும் கண்ணாடித் துண்டுகள், கம்பிகள் யாவற்றையும், நடைபாதையை விட்டு அகற்றிவிடுவது வழக்கம். அந்த ஊரிலே வாழ்ந்த குறும்புத்தனமுடைய இளைஞர்கள் இவர் அவ்வழியாய் வருமுன்னே, கண்ணாடித் துண்டுகள், மற்றும் முள்தடிகளை போட்டுவிடுவார்கள். ஆனால் அந்த மனிதர் தன் வயதான நாட்களிலும் சலிக்காமல் தான் செல்லும் பாதையிலுள்ள எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி வந்தார். ஒரு நாள் மதிய வேளையிலே, அவ்வழியாக ஒர் தாயாரும் அவளுடைய சிறிய மகனும் நடந்து சென்றபோது, அந்த வழியில் கிடந்த ஒரு கண்ணாடித் துண்டு அந்த தாயாரின் காலில் குத்திவிட்டது.

**மத்தேயு 5:14**

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

அதைக் கண்ட அந்த சிறு பையன், “அந்த வயதான தாத்தா இன்று இந்த வழியால் இன்னும் போகவில்லை போல” என்று சொல்லிக் கொண்டான். ஆம் உண்மையிலே அந்த வயதானவர் சுகவீனமுற்றிருந்ததால் சில நாட்களாக வெளியே செல்லமுடியாதிருந்தார். சற்று சிந்தித்துப் பாருங்கள்! அந்த வயதானவர் யார் முன்னிலையிலும் எந்த, பேச்சுக்களையோ, பிரசங்கங்களையோ செய்யவில்லை. பல வருடங்களாக, சலிப் பில்லாமல், நாளாந்தம் தான் செய்து வந்த நற்கிரியைகளால், அந்த ஊரில் உள்ள சிறுவர்கள் மத்தியில் கூட தன் நற் பண்புகளை வெளிக் காட்டியவராக இருந்தார். தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்ட நாங்கள். அவருக்குள்ளாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட நாங்கள், இந்த வார்த்தைகளை சொல்லி எங்களையே நாங்கள் மேன்மை பாராட்டாமல், சலிப்படையாத எங்கள் நற்கிரியைகளின் வழியாக நாங்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க வேண்டும். சொல்லுவது சுலபம் செய்வது கடினம் என்பதை நாங்கள் யாவரும் அறிவோம். ஆனால், எங்களை பெலப்படுத்துகின்ற கிறிஸ்து இயேசுவால் நற்கிரியைகளை செய்யும் ஆற்றலை நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம். உங்கள் வாழ்க்கையின் உயர்விலும் தாழ்விலும், எவ்வேளையும், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

**ஜெபம்**: நன்மையின் ஊற்றாகிய தேவனே, சோர்ந்து போகாமல், இயேசுவின் நாமத்திலே நற்கிரியைகளை நடப்பித்து முடிக்கத்தக்கதான ஆற்றலைத் தினமும் எனக்குத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முன் மாதிரியான வாழ்க்கை

"நாங்கள் மற்றவர்களுக்கு முன் மாதிரியானவர்கள்" என்று எங்களைக் குறித்து நாங்கள் கொடுக்கும் சாட்சிகளில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. எங்கள் நற்கிரியைகளைக் கண்டு மற்றவர்கள் அதற்கு சாட்சி பகரும் படியாக எங்கள் வாழ்க்கை அமைய வேண்டும். (நீதி 27:2) பரிசுத்த வேதாகமத்திலே, புதிய ஏற்பாட்டில், காணப்படும் தெசலோனிக்கேயா என்னும் பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தங்கள் அயலிலுள்ள மக்கெதோனியா அகாயா என்னும் பட்டணங்களிலுள்ள விசுவாசிகள் யாவருக்கும் நற்சாட்சிகளாக இருந்தார்கள். இன்று இந்த உலகிலே, பல நாடுகளிலே மதச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருகின்றது. அதாவது, ஒருவன், ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினால் அது அவனுடைய தனிப்பட்ட தீர்மானம் என்று கூறுகின்றார்கள். வேறு சில நாடுகளிலே, கிறிஸ்தவர்கள் ஆங்காங்கே துன்புறுத்தப்படுவதை செய்திகள் வாயிலாக கேள்விப்படுகின்றோம். தேவ ஊழியராகிய அப்போஸ்தலர் பவுலுடைய நாட்களிலே, கிறிஸ்தவத்தை தழுவிக் கொள்கின்றவர்கள், அதிகமாக துன்புறுத்தப்பட்டார்கள். அப்படியிருந்தும், தெசலோனிக்க பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்கள், மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, கர்த்தரை பின்பற்றுகிறவர்களானார்கள். அதாவது, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோம், ஞானஸ்நானம் பெற்றோம் என்று அத்துடன் மௌனமாக இராமல், ஒருவரும் அவர்களுடைய மாதிரியான இரட்சிப்பின் வாழ்க்கையை குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின அவர்களுடைய விசுவாசம் அயல் பட்டணங்களிலே பிரசித்தமாயிற்று. எப்படியெனில், விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழும்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு, பரலோகத்திலிருந்து வருவதை தாங்கள் எதிர்பார்த்துக் வாழ்க்கை வாழ்வதையும் குறித்து மற்றவர்களுக்கு சாட்சியாக அறிவித்தார்கள். இவ்வண்ணமாக எங்கள் வாழ்க்கையின் மாதிரியைக் கண்டு, மற்றவர்கள் அதைக் குறித்து சாட்சி பகரும்படி நாங்களும் வாழ வேண்டும்.

**1 தெச 1:7**

**இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.**

**ஜெபம்**: பராக்கிரமம் நிறைந்த தேவனே, எந்த சூழ்நிலையிலும், உபத்திரவத்திலும், அவமானத்திலும், உம்முடைய இரட்சிப்பு என்னில் நிறைவேறும்படியான வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய விருப்பம்

சாட்சியான முன்மாதியான வாழ்க்கை வாழ வேண்டும். வெளி இடங்களிலே மனதார நற்கிரியைகளை செய்ய வேண்டும் என்பதை நாங்கள் யாவரும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் சபை ஐக்கியத்திலே, சகோதரர் மத்தியிலே, எப்படி சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வது? ஆராதனை நேரங்களிலே சாட்சிகளுக்கு ஒதுக்கப்படும் நேரத்திலே எழுந்து தேவனுடைய நாமத்தின் மகிமைக்கென்று அவர் செய்த கிரியைகளை கூறுகின்றோம். இது சாட்சியுள்ள வாழ்க்கையின் ஒரு பகுதி. இதற்கு இன்னும் மேன்மையான காரியங்கள் உண்டு. மோசே என்னும் தேவ ஊழியர், தேவனுடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும்படியாக நியமிக்கப்பட்டார். அந்த வனாந்திர யாத்திரையிலே, தேவனுடைய ஜனங்கள் மத்தியிலே பல விரும்பப்படாத சம்பவங்கள் நடைபெற்றதை நாங்கள் அறிவோம். அதாவது, தேவனை அறியாத புறஜாதி மனிதர்களால் வந்த உபத்திரவங்கள் அல்ல, இவை தேவனை அறிந்து, அவருடைய பலத்த அற்புதங்களை கண்ட ஜனங்களால் உண்டான உபத்திரவங்கள். அப்படியான சூழ்நிலைகளிலே நாங்கள் எங்கள் நடக்கையை காத்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஒத்ததாகவே, இன்று சபை நடுவில் சில விரும்பப்படாத சம்பவங்கள் நடைபெறலாம். உதாரணமாக, நீங்கள் செய்யாத குற்றம் ஒன்றை நீங்கள் செய்தீர்கள் என ஒருவர் உங்களை குற்றம் சாட்டினார் என்று உங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இந்த வேளையிலே, தேவனுடைய நாமம் உங்கள் வழியாக மகிமைப்படும்படியாக நீங்கள் தேவனுக்கு எப்படி சாட்சியாக இருக்க முடியும்? உங்களுக்கு ஆதரவாக ஒரு குழுவை ஏற்படுத்திக் கொள்வீர்களா? குற்றம் சாட்டியவரும் அவ்வண்ணமாகவே செய்யக் கூடும். நியாயத்தையும் நீதியையும் உங்கள் எண்ணப்படி உங்கள் கைகளில் எடுத்துக் கொள்வீர்களா? குற்றம் சாட்டியவர்களும் அப்படியே செய்யக் கூடும். இவைகளின் முடிவு அழிவு. எனவே, தேவன் விரும்புவதை செய்ய வேண்டும். தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பது போல நாங்களும் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படியாக விரும்பப்படாத எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய விருப்பம் எங்கள் வாழ்வில் நிறைவேறுவதே சாட்சியுள்ள வாழ்க்கை.

**சங்கீதம் 37:34**

**நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்**

**ஜெபம்**: நீதியின் தேவனே, எந்த சூழ்நிலையிலும், உபத்திரவத்திலும், அவமானத்திலும், உம்முடைய விருப்பம் என்னில் நிறைவேறும்படியான வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# உலகம் இரட்சிப்படையும்படி

“இந்த காவற்துறை அதிகாரி எவ்வளவு சிறப்பாக சேவையை செய்தாலும், இயேசுவை அறியாத அந்நியனாக இருப்பதால் நரகத்திற்கு செல்லப் போகின்றாரே” “இந்த மருத்துவர் எவ்வளவாய் படிந்திருந்தாலும், இயேசுவை அறியாததால் நரகத்திற்கு செல்லப் போகின்றாரே” என்று இப்படியாக இயேசுவை அறியாத மனிதர்களை காணும் போது ஒரு மனிதனின் உள்ளத்திலே நினைவுகள் தோன்றிற்று. காலப்போக்கில் அது அலையலையாய் எழுந்து வர ஆரம்பித்தது. இதனால், அவன் மனம் கடினப்பட ஆரம்பித்தது. சற்று இந்த சம்பவத்தை சிந்தித்து பாருங்கள்! எங்களில் பலர் இயேசுவை அறியாமல் வாழ்ந்து வந்த நாட்கள் அதிகம். தேவ கிருபை எங்கள் வாழ்வில் வெளிப்பட்டதால், இயேசு வழியாக உண்டான பாவ மீட்பை பெற்றுக் கொண்டோம். இன்று நாங்கள் அழிந்து போகாமல், இயேசுவை பற்றிக் கொண்டு வாழ்வது அவருடைய கிருபை. நாளைய நாள் எங்களுடைய கரங்களில் இல்லை. எனவே இயேசுவை அறியாத மருத்துவரை காணும் போது “இவர் வழியாக எங்களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்கும் நன்மைக்கு, அந்த மருத்துவருக்கும், தேவனுக்கும் நன்றி செலுத்துவதோடு, அந்த மருத்துவரும் இயேசுவை அறிய வேண்டும், நித்திய வாழ்வை கண்டடைய வேண்டும் என்று வாஞ்சிக்க வேண்டும். தெருவை சுத்தம் செய்கின்றவர்களாக இருந்தாலும், தேசத்தின் தலைவராக இருந்தாலும், எல்லோருடைய ஆத்துமாக்களும் தேவனுடைய பார்வையிலே விலையேறப்பெற்றவைகள். தேவனிடத்தில் வேற்றுமை ஏதும் இல்லை. எல்லோரும் இரட்சிப்படைந்து நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே பிதாவாகிய தேவனுடைய சித்தம். எனவே காண்கின்ற யாவரையும் பாவி என்று எங்கள் இருதயத்தால் தள்ளிவிடக்கூடாது. இயேசுவை அறியாத நாட்களிலே, ஒருநாள் நாங்களும் அந்த நிலையிலே இருந்தோம். தேவனுக்கு விரோதமாக பேச்சுக்களை பேசியிருந்தோம். விக்கிரக ஆராதனைக்கு உட்பட்டிருந்தோம். எனவே நாங்கள் அந்தகார கிரியைகளுக்கு உடன்பட்டவர்கள் அல்ல. ஆனால் எங்கள் உள்ளத்திலே, ஒவ்வொருவரும் செய்யும் சேவைக்கு நன்றியுள்ளவர்களாகவும், அவர்களுடைய ஆத்துமா பாதாளத்திலே அழிந்து போகாமல், பரலோகிலே நித்திய வாழ்வை அடைய வேண்டும் என்ற மனநிலையுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

**யோவான் 3:17**

அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தகப்பனே, தங்களை தாழ்த்தி, உம்மிடம் வரும் எல்லோரையும் நீர் ஏற்றுக் கொள்ளுவீர் என்ற உண்மையை உணர்ந்து, எல்லோரின் மீட்புக்காகவும் ஜெபிக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஐப்பசி 13 | 📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:17

# உலகத்தால் கறைபடாதபடி

ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய வாழ்வை அடைய வேண்டும் என்ற மனநிலையுடையவர்களாக நாங்கள் இருக்க வேண்டும் என்று நேற்றைய நாளில் தியானித்தோம். ஆனால் எங்கள் பரிசுத்த வாழ்வை நாங்கள் எப்போதும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை குறித்து இன்று தியானிப்போம். இயேசுவை அறிந்த ஒரு இளைஞன், தேவனை அறியாத, தன்னுடைய நண்பர்களோடு உணவுச் சாலைகளுக்கு சென்று வந்தான். அவன் நண்பர்கள் மதுபானம் அருந்தும் போது, இவன் மென்பானங்களை அருந்திக் கொள்வான். இது அவனுக்கு வழக்கமாயிற்று. ஒரு நாள் சபையின் மூப்பர் அவனை அழைத்து, தம்பி, அவ்வப்போது உன் பழைய நண்பர்களுடன் சென்று வருகின்றாயே என்ன விடயம் என்று வினாவினார். இயேசு ஆயக்காரரோடும், பாவிகளோடும் விருந்துக்கு சென்றார் எனவே நானும் சென்று அவர்களுக்கு இயேசுவை பற்றி கூறுகின்றேன் என்றான். அதற்கு மூப்பர்: இயேசு ஒரு இடத்திற்கு சென்றால் அங்கே அன்றுடன் விடுதலை உண்டாயிக்கும். இயேசு சென்ற இடமெல்லாம், அவர் பேசும் போது மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அல்லது விடுதலையடையும் வழியைக் குறித்தும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும் பாவிகள் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி கொடுத்தார். இயேசு சென்ற இடங்களிலே, பாவிகள் தங்கள் இளமை நாட்களின் குறும்புத்தனங்களை காரியங்களையும், வாலிபத்தின் பழைய பாவங்களையும் பேசி, வெறி கொண்டு, கேளிக்கை செய்யும் போது, அவர் அதைப் பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. ஆகவே, நீ இப்படியெல்லாம் இயேசுவைப் போல் செய்கின்றாயா? என்று கேட்டார். அந்த இளைஞனுக்கோ தகுந்த மறுமொழி ஏதும் கொடுக்க முடியவில்லை. பிரியமானவர்களே, எங்களுடைய நண்பர்கள் இரட்சிப்படைய வேண்டும் என்ற வாஞ்சை எங்களிடம் எப்போதும் இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் எங்கே இருக்கக் கூடாது என்பதைக் குறித்து, சங்கீதம் முதலாம் அதிகாரத்திலே விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றது. நாங்கள் எங்களது நிலையை விட்டு விலகிச் செல்லும் போது, நாளடைவில் எங்கள் வாழ்க்கை பின்மார்க்கமடைந்து போய்விடும்.

**1 பேதுரு 2:16**

**சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, நீர் எனக்கு கொடுத்திருக்கும் சுயாதீனத்தை என் இச்சைகளை நிறைவேற்றும்படி பயன்படுத்தாதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பில் பரிசுத்தமுள்ளவர்கள்

பிதாவாகிய தேவன்தாமே, நாம் **அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு**, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார். நாங்கள் அதிகமாக அன்பைப் பற்றிப் பேசிக் கொள்கின்றோம் ஆனால் தேவ னுடைய அன்பு பரிசுத்தமுள்ளது என்பதை மறந்து போய்விடுகின் றோம். உதாரணமாக பரிசுத்தத்தில் பொய் என்னும் வார்த்தைக்கு இடமில் லை. எனவே தேவனுடைய அன்பு உண் மையுள்ளது. அந்த உண்மையுள்ள தேவ அன்பு எங்களில் வளர்ந்து பெருக வேண்டும். எங்கள் அன்பும் உண்மையு ள்ளதாக இருக்க வேண்டும். பாவ மான செயல் ஒன்றை பாவம் இல்லை என்று சொல்வது தேவ அன்பின் குணாதிசயம் அல்ல. தேவன் எல்லோரையும் ஏற்றுக் கொள்கின்றார் ஆனால் பாவத்தை வெறுக்கின்றார். ஆனால் சில மனிதர்களோ, தேவன் அன்புள்ளவர், எல்லோரையும் ஏற்றுக் கொள்கின்றவர் என்று சொல்லி, துணிகரமான பாவங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுகின் றார்கள். “அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படி க்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களு க்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. **நீங்கள் பரிசு த்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிரு க்கிறது**. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படா மல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ள வேண்டும்” என பரிசுத்த வேதாகமத் திலே வாசிக்கின்றோம். பாலியத்திற்குரிய இச்சைகள் மலிந்து கொண் டிருக்கும் இந்த உலகத்திலே, கிறிஸ்துவின் நாளிலே கறைதிரை அற் றவர்களாக அவருக்கு முன்பாக நிற்கும்படிக்கு, எங்கள் பார்வை, சிந்தை, நடக்கையை பரிசுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டும். எங் களை அழைத்தவர் பரிசுத்தமுள்ளவராக இருப்பது போல நாங்களும் எல்லாவற்றிலும் பரிசுத்தமுள்ளவர்களாக வளர்ந்து பெருகுவோம்.

**1 தெச 4:3**

நீங்கள் பரிசுத்தமுள்ளவ ர்களாகவேண்டுமென் பதே தேவனுடைய சித் தமாயிருக்கிறது.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பரலோக தகப்பனே, உம்முடைய பிள்ளையாக என்னை அழைத்தீர், என் பார்வை, சிந்தை, செயல் யாவும் உமக்கு முன்பாக பரிசுத்தமாயிருக்கும்படி எனக்கு கற்றுத் தந்து வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ வாக்கு நிறைவேறும்

தேவன் தம்முடைய வார்த்தையிலே உண்மையுள்ளவர். ஆபிரகாம் என்ற மனிதனுக்கு அவன் மனைவியாகிய சாராள் வழியாக பிள்ளை பிறக்கும் சாத்தியம் இல்லாதிருந்த போது, ஆபிரகாமுக்கு, சாராள் வழியாக ஒரு சந்ததியை உருவாக்குவேன் என்றும், அந்த சந்ததிக்கு ஒரு சொந்த தேசத்தை கொடுப்பேன் என்றும் வாக்களித்தார். அந்த சந்ததி உருவாகிய போது, அவர்கள் விடுதலையடைய முடியாதபடிக்கு ஒரு பலத்த ராஜ்யத்தில் அடிமைகளாக இருந்தார்கள். வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கும் போது, சொந்த தேசத்தைக் குறித்த எண்ணம் ஒரு கனவாக இருந்தது. ஆனால், சர்வ வல்லமையுள்ளவருடைய வாக்குத்தத்தத்திற்கு எதிராக யார் தான் நிற்கக் கூடும்! ஒருவராலும் கூடாது. தம்முடைய ஜனங்கள் உண்மையற்றவர்களாக இருந்த போதும், அவர் தாம் உரைத்த வாக்கை நிறைவேற்றி முடித்தார். அப்படிப்பட்ட தேவன், பரம கானான் (பரலோகம்) அழைத்து செல்வேன் என்று வாக்கு கொடுத்திருக்கின்றார். இந்த பூமியிலே வாழும் நாட்களிலே அவர் எங்களுடனே கூட இருப்பேன் என்று கூறியிருக்கின்றார். எனவே, உங்கள் வாழ்க்கையை அழுத்தும் சவால்களை கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். விசுவாசத்திற்கு முரணான வார்த்தைகளை பேசாதிருங்கள். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். இவைகளைக்குறித்து நாம் என்னசொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். எனவே தேவனுடைய வாக்கை குறித்து உறுதியுள்ளவர்களாயிருங்கள். அவர் கூறிய நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போவதில்லை. எல்லாம் நிறைவேறும்.

**யோசுவா 21:45**

**கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை எல்லாம் நிறைவேறிற்று.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, நிலையற்ற வாழ்வின் நிம்மதியே, உம்முடைய வாக்கில் நீர் உண்மையுள்ளவர் என்பதை எப்போதும் அறிக்கை செய்து காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்கனிகள் வெளிப்படட்டும்

இராஜாக்கள் ஆட்சி செய்யும் காலத்தில் இராஜ்யத்தின் பாதுகாப்பிற்காக, அவர்கள் கோட்டைகளை அமைப்பதுண்டு. அகலமான கோட்டை மதிலுக்கு வெளிப்புறமாக, அகழிகளை உண்டு பண்ணி, அங்கே பயங்கரமான முதலைகளை வளர்த்து வருவார்கள். கோட்டைக்குள் நுழைய முற்படுவோர் முதலைகளுக்கு இரையாகி விடுவார்கள். எங்களுடைய வாழ்க்கையானது எங்கள் இரட்சகரும் கோட்டையுமாகிய இயேசுவுக்குள் இருக்கின்றது. இயேசுவுக்குள் எங்களுக்கு எல்லா பாதுகாப்பும் இருக்கின்றது. ஆனால் எங்களை அண்டி வருகின்றவர்கள் அவர்கள் யாராக இருந்தாலும், முதலைகளை அல்ல தேவ நற்கனிகளையே கண்டு கொள்ள வேண்டும். நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரம், தன் அருகில் வரும் யாவருக்கும் தன் இயற்கையின் சுபாவமாகிய நற்கனியை கொடுப்பது போல, தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையும் இருக்கும். அப்படியானால், எதிராளியானவன் அணுகாமல் எங்களை சுற்றியிருக்கும் பாதுகாப்பு என்ன? அது **பரிசுத்த வாழ்வு!** எப்படியாக நாங்கள் ஒரு விளக்கை கொளுத்தும் போது இருள் அகன்று போகின்றதோ, அதே போல தேவனுடைய பேரொளி வீசும் இடத்தில், பாவ இருள் மேற்கொள்ள முடியாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வாழ்ந்த போது, யாவருக்கும் எப்போதும் நன்மை செய்கின்றவராய் சுற்றித் திரிந்தார். அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அவரை சோதிக்கும்படி அவரிடத்தில் பல யூத மதத் தலைவர்கள் வந்தார்கள் ஆனால் அந்த வஞ்சகமான காரியங்கள் இயேசுவை மேற்கொள்ள முடியவில்லை. அவருடைய வேதத்திலே பிரியமாயிருக்கிற மனுஷன், அதை இரவும் பகலும் தியானிப்பதால், துன்மார்க்கருடைய ஆலோசனை எது என்பதையும், பாவிகளுடைய வழிகள் எது என்பதையும், பரியாசக்காரர் யார் என்பதையும் நிதானித்து அறிந்து கொள்கின்றான். நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் சத்தம் (அவருடைய வார்த்தை) இன்னதென்பதை அவன் அறிந்திருக்கின்றபடியால், எதிராளியானவன் அவனை மேற் கொள்ள முடியாது.

**சங்கீதம் 1:2**

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**ஜெபம்:** வழிநடத்தும் நல்ல தேவனே, இந்த உலகத்திலே உம்முடைய தெய்வீக சுபாவங்களை வெளிக்காட்டும், உம்முடைய பிள்ளையாக நான் விளங்கும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நித்திய ஆறுதல் உண்டு

உங்கள் சாந்தகுணம் **எல்லா மனுஷருக்கும்** தெரிந்திருப்பதாக என்று வேதத்திலே வாசிக்கின்றோம். மேலும் கர்த்தராகிய இயேசு கூறுகையில், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்னிட த்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்றார். இப்படிப்பட்ட தெய்வீக குணா திசயங்களில் நாங்கள் வளர வேண்டும். இந்த நறுமணம் எல்லா மனி தர்கள் மேலும் வீச வேண்டும் என்று நேற்றய நாளிலே தியானித் தோம். வேட்டைக்கு கொண்டு செல் லும் நாய்கள், எந்த ஒரு உயிரின த்தை கண்டாலும், அதை வேட்டை யாட வேண்டும் என்ற நோக்கத்தையே கொண்டிருப்பது போல, நாங்கள் யாரைக் கண்டாலும், கடித்து குதறி விட வேண்டும் என்ற எண்ணம் சற் றும் இருக்கக் கூடாது. சில மனிதர்க ளின் வாழ்க்கையில் ஒன்றன்பின் ஒன் றாக பல ஏமாற்றங்களுக்கு முகங் கொடு ப்பதால், மற்றய மனிதர்கள் யாவர் மேலும் ஒரு கசப்பு ஏற்பட்டு விடுகின்றது. எனவே இன்னுமொரு ஏமாற்றத்தை சந்திக்க பெலனில்லாததால், தங்களை காத்துக் கொள் ளும் உபாயமாக, தங்கள் பக்கமாக வரும் யாவரையும் வார்த்தை களாலே விரட்டி விடுகின்றார்கள். ஏமாற்றங்கள், மன வேதனையை உண்டு பண்ணுவது ஒரு கசப்பான உண்மை. ஆனால், நாங்கள் ஒருவரும் அதை ஏற்றுக் கொண்டு அடிமைகளாக வாழத் தேவையி ல்லை. எங்கள் சொந்த பெலத்தினாலோ அறிவினாலோ மனப்பாரங்க ளையும் வேதனைகளையும் மேற்கொள்ள முடியாது. கவலைப்படா திருங்கள்! மனித குலம் பாவ இருளில் இருந்து விடுதலையடைய வேண்டும் என்று தன்னையே எமக்காக பலியாக கொடுத்த அருள் நாதர் இயேசு அழைக்கின்றார். உங்கள் மனப்புண்கள் நீங்கள் நேசித்த வர்களாலும், உயிருக்கு உயிராக நம்பினவர்களாலும் உண்டாயிருக்க லாம். எவை எப்படியாக இருந்தாலும், வறண்ட வனாந்தர வழிகளை வயல் நிலம் போல மாற்றும் இயேசு உங்கள் வாழ்க்கையை மாற்றிப் போடுவார். மனப்புண்களை ஆற்றி, நீங்கள் தேடும் நிம்மதியை இன்றே உங்களுக்கு அவர் தருவார். எனவே, உங்கள் மனதிலுள்ளவைகளை ஜெப த்தின் வழியாக இன்றே இயேசுவுக்கு தெரியப் படுத்துங்கள்.

**மத்தேயு 11:28**

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத் தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பா றுதல் தருவேன்.

**ஜெபம்:** விடுதலை தரும் தேவனே, பாரங்களை தாங்க முடியாமல் சோர்ந்து போயிருக்கும் என் நிலையை அறிந்தவரே, நான் போக வேண் டிய வழியை எனக்கு கற்றுத் தந்து என்னை வழிநடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நான் குணமடைய வேண்டும்

ஒருவரும் செல்லக் கூடாது என்று தடை போடப்பட்டிருந்த காட்டிற்குள் சென்று மரங்களை வெட்டிய மனிதன் ஒருவனை பயங்கரமாக வனவிலங்கு ஒன்று தாக்கியது. கையிலே ஏற்பட்ட பெரிய காயத்திலிருந்து இரத்தம் அதிகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரே ஓட்டமாய் ஓடி அருகிலிருந்த ஊருக்குள் சென்று விட்டான். அந்த ஊரார் யாவரும் அவனைப் பார்த்தார்கள். அந்த வேளையிலே அவன் "நான் மட்டுமா இப்படிக் காயப்பட்டேன், இன்னும் எத்தனை பேர் காயப்பட்டிருக்கின்றார்கள்" "ஊரின் பஞ்சாயத் தலைவரின் மகனும் இப்படியாக காடு சென்று மரம் வெட்டி வருகின்றானே" "இது மட்டும்தானா களவு? ஊரில் எத்தனை கள்ளர்கள் இருக்கின்றார்கள்" என்று கூறிக் கொண்டிருப்பானென்றால், அவன் இரத்தம் மிகையாக ஓடி உயிருக்கு ஆபத்து நேரிடலாம். இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வி என்ன? நீ உயர் தப்பி வாழ விரும்புகின்றாயா? மற்றவன் ஏதும் செய்திருக்கலாம் அல்லது செய்து கொண்டிருக்கலாம். நீ குணமடைய விரும்புகின்றாயா? பிரியமானவர்களே, இதற்கொத்ததாகவே இன்று பலர் சபை ஐக்கியங்களிலும், "அவர்கள் செய்கின்றார்கள் நான் செய்தால் என்ன?" "அந்த நாட்டிலுள்ள ஊழியரே தவறியிருக்கி ன்றார் நான் தவறினால் என்ன?" "நீங்கள் செய்யாத குற்றத்தையா நான் செய்து விட்டேன்?" இப்படியான கூற்றுக்கள் சுய பெருமைக்கு ரியவைகள். மனந்திரும்புதலுக்குரியவைகள் அல்ல. இங்கு கேட்கப் படும் கேள்வி என்னவென்றால், "நீ குணமடைய விரும்புகின்றாயா?" நீ பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை உன்னுடைய வாழ்வில் செய்ய விரும்புகின்றாயா?" விரும்பினால், மற்றவன் செய்யும் குற்றத்தைப் பார்த்து உன் மனதை தேற்றிக் கொண்டு, அழிவை நோக்கி செல்லாமல், இன்றே ஒப்புக்கொடு! நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**1 யோவான் 1:9**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நான் செய்யும் குற்றங்களை மற்றவர்களும் செய்கின்றார்களே என்று என்னை தேற்றிக் கொள்ள முயலாமல், பாவங்களை விட்டுவிட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உற்சாகப் படுத்துங்கள்

நான் மேற்பார்வையாளராவதற்கு, என் பெலவீனங்களிலிருந்து இன்னும் முன்னேற வேண்டிய காரியங்கள் ஐந்து இருக்கின்றது என என்னுடைய வருடாந்த முன்னேற்ற மீள் ஆய்வின் போது எங்களுடைய முன்னாள் இயக்குனர் கூறியிருந்தாரே, ஆனால் நீங்கள் எனக்கு மேற்பார்வையாளராக பதவி உயர்வு தந்ததின் காரணம் என்ன என்று தயவாக தன்னுடைய புதிய இயக்குனரிடம், ஊழியர் ஒருவர் கேட்டார். அதற்கு இயக்குனர்: நீ இன்னும் முன்னேற வேண்டிய ஐந்து காரியங்கள் இருப்பது உண்மை, நான் அதை நோக்கிப் பார்த்து உன்னுடைய பதவி உயர்வைத் தடுக்காமல் உன்னிடம் இருக்கும் மற்றய ஏழு நற்பண்புகளை மையமாக வைத்து இந்த உயர்வை அனுமதித்திருக்கின்றேன். மற்றய பெலவீனமுள்ள விடயங்களிலும் நீ சீக்கிரத்தில் முன்னேறுவாய் என்பது என்னுடைய எதிர்பார்ப்பு என்றார். குறைவுகளும் நிறைவுகளும் மனிதர்களுடைய வாழ்வில் உண்டு, முற்றிலும் தேறியிருக்கின்றேன் என்று கூறுவதற்கு எவரும் இல்லை. நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளை நோக்கிப் பார்க்கும் போது, உங்கள் கண்களில் என்ன தெரிகின்றது? எப்போதும் மற்றவர்களின் குறைகள் மட்டுமே தெரிகின்றதா? அப்படியாயின் நாங்கள் எங்கள் நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனெனில் தேவன் தாமே, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். இது தேவனுடைய கிருபை. இந்த அழைப்பிற்கு எவருமே பாத்திரர் அல்ல. கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்த சாயலில் நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும் என்பதே பிதாவாகிய தேவனுடைய எதிர்பார்ப்பு. எனவே, எப்போதும் குறைகளையே நோக்கி பார்க்காமல் ஒவ்வொரு நாளும் நாங்கள் கிறிஸ்துவின் சாயலில் வளர்வதோடு, ஒருவரை ஒருவர், தாங்கி, தேற்றி, உற்சாகப்படுத்தி முன்னேறிச் செல்ல வேண்டும். ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

**1 தெச 5:11**

**ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்திஉண்டாகும்படி செய்யுங்கள்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, எப்போதும் மற்றவர்களின் குறைகளையே நோக்கிப் பார்க்காமல், யாவரும் நிறைவடையும்படிக்கு மற்றவர்களைத் தாங்கி, தேற்றி நடத்த பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 24:11–13

# காலத்தை அறிந்து கொள்ளுங்கள்

**எபேசியர் 5:16**

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

நாட்கள் கொடியதாக மாறிக் கொண்டிருக்கின்றபடியால் இப்போது எங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு நாளையும் நாங்கள் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். எப்படியாக நாட்கள் மாறிக் கொண்டு போகின்றது? பாவமும் பாவத்தை உண்டு பண்ணும் செயல்களும் இப்போது அதிகதிகமாக மலிந்து கொண்டு போகின்றது. அது மட்டுமல்லாமல், வேதத்திலே பாவம் என்று திட்டமாக வகுக்கப்பட்டு இருக்கும் காரியங்களை சட்டபூர்வமாக செய்வதற்கு அனுமதி கொடுக்கும் நாடுகளும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதன் விளைவு அடுத்த தலைமுறையினருக்கு அதிக பாதிப்பை கொடுக்கும். ஏனெனில், மழலைகள் வளர்ந்து பாடசாலைக்குச் செல்லும் வேளையில், பாவமான பல காரியங்கள் சட்டமாக இருப்பதால், அதைப் பாவம் என்று எண்ணிக் கொள்ளமாட்டார்கள். இப்படியாக பாவம் மலிந்திருக்கின்றது. இன்னுமொரு பக்கமாக, வேதப்புரட்டுகள் அதிகரித்து கொண்டே போகின்றது. அதாவது, மலிந்து கொண்டிருக்கும் பாவத்திலிருந்து விடுதலையடையும் தூய வழியை அறிந்து கொள்ள முடியாதபடிக்கு, அநேக போலியான உபதேசங்கள் இன்று போதிக்கப்பட்டு வருகின்றது. இதனால், கிறிஸ்தவம் என்ற போர்வையை போர்த்துக் கொண்டு, தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும்படி பலர் பல வழிகளை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இவைகளினால், தேவனுடைய நாமம் தேவனை அறியாதவர்கள் மத்தியில் தூஷிக்கப்பட்டு வருகின்றது. இதனால் தேவனை பற்றிக் கொண்டு வாழ்ந்தவர்கள் கூட, பின்மாற்றமாய் போய்விடுகின்றார்கள். இவை யாவற்றிற்கும் உரிய தண்டனையை தேவன் குறித்த காலத்தில், அவரவர் பெற்றுக் கொள்வார்கள் (யூதா 1:14-15). எனவே புதிதாய் நுழையும் உபதேசங்களைக் குறித்த எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். நான் சுயாதீனன், எனக்கு சுதந்திரம் இருக்கின்றது என்று கூறி பலர் தங்கள் கண் போன வழியிலே சென்று கொண்டிருக்கும் காலம் இது. தேவ பிள்ளைகளாகிய நாங்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். தேவனுக்கென்று நாங்கள் செய்யும் கிரியைகளில் ஓய்ந்து போகக்கூடாது. எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அருமையான சந்தர்ப்பங்களை நாங்கள் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நாட்கள் கொடியதாக மாறிக் கொண்டிருப்பதை அறிந்து, இன்னும் அதிகமாக உமக்கென்று சேவை செய்ய பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள் \| ஐப்பசி 21 | 🕮 மாலை வாசகம் – 2 பேதுரு 1:4 |
|---|---|

# பிதாவின் சித்தம் செய்வோம்

எப்படி நாட்களை ஞானமாய்ப் பிரயோஜனப்படுத்திக் கொள்வது? முதலாவதாக எங்கள் இருதயத்தை நாங்கள் காத்துக் கொள்ளும்படிக்கு தேவனுடைய தூய்மையான சத்திய வேதத்தை கற்றுக் கொள்ள வேண்டும். **பிதாவாகிய தேவனுக்கு பிரியமானதை, அவருடைய விருப்பத்தை, அவருடைய சித்தத்தை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் செய்ய வேண்டும்.** அவை என்ன என்பது பரிசுத்த வேதாகமத்தில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. எனவே பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள். இன்று அதிகதிகமான வேதம் சார்ந்த புத்தகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியை அந்த புத்தகங்களிலும், இன்நெற் ஊடகங்களூடாக வரும் செய்திகளிலும் வைக்காதிருங்கள். ஒரு வேளை "உள்ளான மனிதன்" சஞ்சிகையை ஒரு துணைப் புத்தகமாக நீங்கள் வாசித்து வரலாம், ஆனால் பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் நேரடியாக வாசித்து விளக்கங்களை அறிந்து கொள்ளும் அளவிற்கு வளர வேண்டும். பரிசுத்த வேதாகமத்தை அதிகதிகமாக வாசியுங்கள். திரும்பத் திரும்ப வாசியுங்கள். ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள். வெற்றி வாழ்க்கைக்கு ஜெபம் இன்றியமையாதது. தூய ஆவியானவர் நிச்சயமாக ஞானத்தை தந்து தூய்மையான சத்தியத்தை கற்றுக் கொடுப்பார். கற்றவைகளை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துங்கள். உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். நீங்கள் கற்ற தூய்மையான சத்திய வேதத்தை உங்கள் பிள்ளைகளுக்கு சின்ன வயதிலிருந்தே முறைப்படி கற்றுக் கொடுங்கள். நீங்கள் அறிந்தவர்களுக்கும் உங்களால் முடிந்த அளவிற்கு மாசில்லாத வேதத்தை கற்றுக் கொடுங்கள். ஒரு சபையிலே அங்கத்தவராக இருக்கப் போகின்றேன் என்று முடிவு எடுத்த பின்பு, அந்த சபையின் சபைகூடிவருதலை விட்டுவிடாதிருங்கள். உங்கள் சபையில் ஞாயிற்றுக் கிழமைகளில் போதிக்கப்படும் தேவ செய்தியை கவனமாக கேட்டு, தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியுங்கள். அடுத்த சில தினங்களுக்கு, தேவனாகிய கர்த்தர் விரும்பும் காரியங்கள் என்ன, அவர் வெறுக்கும் காரியங்கள் என்ன என்பதையும் குறித்த சில வசனங்களை வேதத்திலிருந்து ஆராய்ந்து அறிந்து கொள்வோம்.

**எபேசியர் 5:17**

**ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பிதாவே, உம்முடைய குமாரனுடைய ராஜ்யத்தின் பங்காளிகளாக இருக்கும்படி வேறு பிரித்தீர், அதை உணர்ந்து, இயேசுவைப் போல எப்போதும் உம்முடைய சித்தம் செய்ய என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசு மீண்டும் வருவார்

**1 கொரிந்தியர் 16:13**

**விழித்திருங்கள்,விசுவாசத்திலே நிலைத்திருங்கள்**

நீங்களெல்லாரும் தேவனாகிய கர்த்தரின் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நீங்கள் வஞ்சிக்கும் சாத்தானின் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். அதாவது எங்கள் ஆவிக்குரிய வாழ்வில் எப்போதும் நாங்கள் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆத்துமா எப்போதும் தேவனை நோக்கி காத்திருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு தாமே அவர் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப் போகிற போது, அவருடைய சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். ஆம்! நிச்சயமாக வருவார் என்று, விசுவாசத்திலே தளர்ந்து போகாமல், எங்கள் நற்கிரியைகளிலே சோர்ந்து போகாமல், எங்கள் ஜீவ ஓட்டத்தில் இளைப்படைந்து போகாமல், அவர் வெளிப்படும் போது, கறைதிரை அற்றவர்களாக இருக்கும்படிக்கு தொடர்ந்து முன்னேறுவோம். திருடன் இன்ன ஜாமத்தில் வருவான் என்று தெரியாதது போல, கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். எனவே, பாவத்திற்கு உட்படாமல், தூய ஆவியானவரின் துணையோடு ஒரு போதும் எங்கள் விளக்கானது அணைந்து போகாதபடி ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்த உலகிலே, உங்கள் சுற்றாடலிலே நடக்கும் தீங்கான காரியங்களைக் கண்டு மருண்டு போகாதிருங்கள். “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.” என்று இயேசு கூறியிருக்கின்றார்.

**ஜெபம்**: வாக்கு மாறாத தேவனே, இந்த உலகத்தில் நடக்கும் கேடுகளினால் சோர்ந்து போகாமல் உம் வார்த்தையில் நிலைத்திருக்கும்படி, தூய ஆவியின் பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஐப்பசி 23 — 📖 மாலை வாசகம் – ரோமர் 12:17

# ஜெபிக்கும் பிள்ளைகள்

உங்கள் உடன் சகோதரர் ஒருவர் உங்கள் மனதைப் புண்படுத்தி, உங்களை அவமானப்படுத்தும் நிந்தையான பேச்சுக்களை பேசினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அது உங்களை குறித்த காரியமாக இருக்கலாம், அல்லது உங்கள் பிள்ளைகளைக் குறித்ததான காரியங்களாக இருக்கலாம். சற்று சிந்தித்துப் பாருங்கள்! "உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டும் என்பதே தேவனாகிய கர்த்தருடைய விருப்பம். ஆனால் அவர்களை சபித்துவிடத்தான் மனம் வருகின்றதே தவிர எப்படி அவர்களுக்காக ஜெபிக்க முடியும்? ஆம், அது உண்மையிலே மிகவும் கடினமான காரியம். சைக்கிள் ஓட்டுவதற்கு எனக்கு ஆசையாக இருக்கின்றது, எனக்கு பழக்கித் தாருங்கள் அப்பா என்று ஒரு சின்ன பையன் தன் தந்தையிடம் கேட்டான். தாமதமேதுமின்று அடுத்த நாளே, தன் மகனுக்கு சைக்கிள் பழக்க ஆரம்பித்தார். முதல் கிழமையில், சில தடவைகள் தவறி விழுந்ததும், சின்ன மகனுக்கு மனதில் பயம் பிடித்து விட்டது. "நான் ஒரு போதும் சைக்கிள் ஓடப் போவதில்லை" "இது மிகவும் கடினமான காரியம்" என்று திட்டமாக தன் தந்தையிடம் கூறிவிட்டான். தந்தை அவனை நோக்கி: பொறுமையாக இரு மகனே, நானும் இப்படித்தான் சைக்கிள் பழகினேன் என்றார். சில கிழமைகளுக்கு பின், சின்ன மகனின் மனதில் பெரும் பரவசம், தந்தையின் துணையின்றி தன்பாட்டிற்கே சைக்கிளை ஓட்ட ஆரம்பித்தான். இப்போது சைக்கிள் ஓட்டுவதற்கு பயம் ஏதும் இல்லை. இப்போது சைக்கிள் ஓட்டுவது உல்லாச பயணமாக மாறிவிட்டது. ஆம் பிரியமானவர்களே, எந்த ஒரு காரியமும் முதலில் கடினமாகத்தான் தோன்றும். என்னை நிந்திக்கின்றவனுக்கு பதிலடி கொடுக்காவிட்டால் என்னை குற்றவாளி என்று மற்றவர்கள் கணித்து விடுவார்கள் என்ற பயம் மனதை ஆட்கொண்டு விடும். துணை செய்கின்ற ஆவியானவர் எங்களோடு இருக்கின்றார். ஒருமுறை உங்களை நிந்திக்கின்றவர்களுக்காக ஜெபித்துப் பாருங்கள். என்றுமில்லாத புத்துணர்சி மனதில் தோன்றும். சில தடவைகள் அப்படி செய்தால் பின்பு, அது உங்கள் சுபாவமாக மாறி விடும். நீங்கள் ஞானவான்களாக இருப்பீர்கள். பிதாவாகிய தேவன் உங்களில் பிரியப்படுவார்.

**லூக்கா 6:28**

உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, என்னை நிந்தித்து அவமதிக்கின்றவர்களை சபிக்காமல், அவர்களுக்காக ஜெபிக்கும்படியாக எனக்கு கற்றுத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கத்தை காண்பியுங்கள்

கர்த்தராகிய இயேசு இந்த பூமியிலே இருந்த நாட்களிலே, தம்முடைய ஜனங்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல அலைகின்றார்கள் என்று கூறினார். ஜனங்கள் பாவத்தின் பிடியில் சிக்கி உழன்று கொண்டிருந்தார்கள், ஆனால் அதிலிருந்து வெளியாவதற்கு வழி தெரியாமல் இருந்தார்கள். சிலர் தாங்கள் பாவத்திலே சிக்கியிருக்கின்றோம் என்று அறிந்து, தங்கள் நிலையை ஏற்றுக் கொண்டு, தங்களை கர்த்தர் முன்னிலையில் தாழ்த்தினார்கள். ஆனால், இன்னுமொரு சாரார், தங்களை நீதிமான்கள் என்று எப்போதும் சொல்லிக் கொண்டார்கள். இதனால், அவர்கள் மற்றய மனிதர்களை குற்றவாளிகளென்று தீர்ப்பதிலும், ஆக்கினைத் தீர்ப்பு வழங்குவதிலும் முந்திக் கொண்டார்கள். ஆனால், இயேசுவோ, இந்த இரண்டு சாராரும் பாதாளத்தில் அழிந்து போவதை விரும்பவில்லை. நான் உன் கஷ்டத்தில் உதவினேன், எனவே நீ என் தேவையில் உதவ வேண்டும், நான் உன் குற்றத்தை மன்னித்தேன் எனவே நீயும் என் குற்றங்களை மன்னிக்க வேண்டும். நான் உன்னை விடுதலை பண்ணினேன், நீயும் என்னை விடுதலை பண்ண வேண்டும். இல்லாவிடில் எனக்கும் உனக்கும் இடையில் உடன்படிக்கை இல்லை என்ற பிரகாரமாக மனிதர்கள் எதிர்பார்ப்போடு கடன் கொடுத்தார்கள். மற்றவர்கள் தப்பிதங்களை மன்னித்தார்கள், விடுதலை பண்ணினார்கள். நாங்கள் இப்படியாக எதிர்பார்ப்போடு நன்மை செய்யும்படிக்காய் தேவன் விரும்பவில்லை. கைமாறு கருதாமல், குற்றப் படுத்தாமல், நியாயந்தீர்க்காமல், நாங்கள் மனிதர்களுக்கு பாவத்திலிருந்து விடுதலையடையும் வழியை காண்பிக்கும்படியாய் தேவன் விரும்புகின்றார். நியாயத்தீர்ப்பு நாளிலே இரக்கம் மேன்மைபாராட்டும். (யாக்கோபு 2:13). இந்த உலகிலே மனிதர்களை குற்றப்படுத்தி நியாயந்தீர்க்க அநேகர் இருக்கின்றார்கள். ஆதலால், ஜனங்கள் அழிந்து போகாமல், விடுதலையடையும் வழியை காண்பிக்கும்படிக்கு என்னையும் உங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். எனவே எங்களை சூழ்ந்து இருக்கின்றவர்கள் தவறும் போது, வழி விலகிச் செல்லும் போது, அவர்கள் விடுதலையடைய வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக நாங்கள் இருப்பதையே தேவன் விரும்புகின்றார்.

**லூக்கா 6:37**

விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, பாவ உளையிலே சிக்கித் தவிக்கும் மனிதர்களுக்கு விடுதலையடையும் வழியை காண்பிக்கும் உம்முடைய பிரியமுள்ள பிள்ளையாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மாசில்லாத சுத்தமான பக்தி

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. நீங்கள் உங்கள் நற்கிரியைகள் வழியாக அநாதரவாக இருக்கும் பிள்ளைகள் மற்றும் விதவைகளுக்கு தயவை காண்பித்து வருகின்றவர்களாக இருந்தால், பரமபிதா உங்களில் பிரியமாக இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உற்சாகத்தோடு இன்னும் அதிகமாக செய்யுங்கள். பரலோகிலே உங்கள் கைமாறு மிகவும் அதிகமாக இருக்கும். பொதுவாக மனிதர்கள் ஆதரவற்றிருக்கும் அநாதைகள் மற்றும் வாழ்விழந்திருக்கும் விதவைகளை காணும்போது தங்கள் மனதுருக்கத்தைக் காண்பிக்கின்றார்கள். ஆனால் அந்த வேளையோடு அநேகருடைய மனதுருக்கம் களைந்து போய்விடுகின்றது. நாங்கள் அவர்கள் தேவைகளை சந்திக்க வேண்டும். எங்களால் முடிந்த அளவு, எங்கள் பெலத்தின்படி மன உற்சாகத்தோடு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். எங்களுடைய குடும்பம் நிறைவு அடைந்து மிகையாக இருந்தால் மாத்திரம் நான் உதவி செய்வேன் என்பது தேவ பிள்ளைகளுக்குரிய பண்பு அல்ல. ஒரு வேளை எங்கள் வாழ்வின் சில சுகபோகங்களை ஒறுக்க வேண்டியதாக இருந்தாலும், நாங்கள் அவர்களை மறந்து போய்விடக்கூடாது. சில வேளைகளிலே சில மனிதர்கள் சம்பூரணமான ஏழைகளை தேடுகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே, எல்லா காரியங்களும் தாங்கள் நினைத்த பிரகாரமாக இருந்தால் மாத்திரமே உதவி செய்வோம் என்கின்றார்கள். எங்களில் குறைவுகள் இன்னும் இருக்கும் போது, நாங்கள் எப்படி நிறைவுள்ள ஏழைகளை தேட முடியும். பிரியமானவர்களே, அநாதைகளையும் விதவைகளையும் தாங்குங்கள். உங்கள் ஆத்துமா இந்த உலகத்தால் கறைபடாதபடி காத்துக் கொள்ளுங்கள். இவைகளில் பரம பிதா பிரியமாக இருக்கின்றார்.

**யாக்கோபு 1:27**

**திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.**

**ஜெபம்:** மனதுருக்கமுள்ள தேவனே, எங்கள் தேசத்தில், எங்கள் மத்தியில் ஆதரவற்றிக்கும் ஜனங்களின் தேவைகளில், மன உற்சாகத்தோடு உதவி செய்யும் உள்ளத்தை எனக்குத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் தங்கும் ஆலயம்

எசேக்கியல் என்னுத் தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனுடைய ஆலயத்திற்குள் அவருடைய ஜனங்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை தேவன் எசேக்கியலுக்கு காண்பித்தார். எசேக்கியலைப் பிராகாரத்தின் வாசலுக்குக் கொண்டுபோனார் அப்பொழுது இதோ, சுவரில் ஒரு துவாரத்தைக் கண்டேன். அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ சுவரிலே துவாரமிடு என்றார் நான் சுவரிலே துவாரமிட்டபோது, இதோ, ஒரு வாசல் இருந்தது. அவர் என்னைப்பார்த்து: நீ உள்ளே போய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார். நான் உள்ளே போய்ப் பார்த்த போது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. அதாவது, வெளியிலே ஆலயம் போல தெரிந்தாலும், தேவன் உள்ளே என்ன நடக்கின்றதென்பதை அறிவார். அது போலவே, மனிதன் எங்களுடைய முகத்தைப் பார்க்கின்றான், ஆனால் தேவனோ மனிதனுக்குள், அவனுடைய இருதயத்தின் ஆழத்தில் என்ன இருக்கின்றதென்பதை ஆராய்ந்து அறிகின்றார். அவர் எங்கள் ஒவ்வொருவருடைய இருதயத்தின் தியானங்களை அறிந்திருக்கின்றார். “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனின் உடமைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று தேவ ஊழியராகிய பவுல், சபையோருக்கு புத்தி சொல்கின்றார். இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும் என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே தேவன் தங்கும் ஆலயமாகிய எங்களின் உள்ளந்திரியங்களை பரிசுத்தமாக தேவனுக்கு ஏற்ற இடமாக பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**1 கொரிந்தியர் 3:16**

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ளதேவனே, உமக்கு வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்திலிருந்தால், அவைகளை எனக்கு உணர்த்தி, அதிலிருந்து விடுதலையடையும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெருமையை விட்டுவிடுவோம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நான் சாந்தமும் மனத் தாழ்மையு மாயிருக்கின்றேன். என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி னார். பெருமை பிசாசின் குணாதிசயம். மாயமற்ற தாழ்மை தெய்வீக சுபாவம். எனவே மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் என்று வேதத்திலே அறிவுரை கூறப்பட்டிருக்கின்றது. இந்த உலகத்தினால் உண்டாகும் பணம், கல்வி, அந்தஸ்து போன்றவைகளால் மனிதர்களுடைய இருதயத்திலே பெருமை குடிகொண்டு விடுகின்றது. சில வேளைகளிலே, ஒன் றுமில்லாதிருக்கின்றவர்களின் இருதய த்திலும் காரணமின்றி பெருமை தலை தூக்கிவிடுகின்றது. இவையெல்லாவற் றுக்கும் மேலாக, தேவனை அறிந்தவ ர்களின் மனதில் உண்டாகும் "நான் அவனை விட பரிசுத்தன்" என்பது அதிக கேடுள்ளதாக இருக்கின்றது. ஏனெனில், உலகத்திலுள்ளவர்கள் மெய்யான தேவனை அறியாததினாலே பெருமை கொள்கின்றார்கள். ஆனால் தேவனை அறிந்த அவருடைய பிள்ளைக ளின், பெருமை தேவனுக்குரியதல்ல என்று அறிந்த பின்பும், அவர் கள் மனதில் பெருமை குடி கொள்ளுமென்றால், காலப்போக்கில் அவர்கள் இருதயம் உணர்வற்று போவதால், இனி யாரிடம் இருந்து விடுதலையை பெற்றுக் கொள்ள முடியும்? இவ்வண்ணமாகவே பரி சேயர் என்ற பிரிவைச் சேர்ந்த மனிதனும், பாவியான மனிதன் ஒரு வனும் ஜெபம் செய்ய சென்றிருந்தார்கள். பரிசேயன் ஆலயத்திற்கு தவறாமல் சென்று வந்தான், உபவாசித்தான், காணிக்கைகளை கொடு த்து வந்தான், ஆனாலும் நான் இந்த பாவியாகிய மனிதனை போலி ல்லை என்று தன் இருதயத்திலே பெருமை கொண்டிருந்ததால் அவ னுடைய ஜெபத்தை தேவன் கேட்கவில்லை. பிசா சானவன் அழிக் கவும் கொல்லவுமே வருகின்றான். அதனால் அவனு டைய சுபாவம் எங்களுக்குள் வரும் போது அழிவு சமீபமாக இருக் கின்றது என்று அறிந்து கொள்ளலாம். அழிவுக்கு முன்னானது அக ந்தை விழுதலு க்கு முன்னானது மனமேட்டிமை. எனவே, பரம பிதா அருவருக்கினற இந்த பொல்லாத சுபாவமாகிய பெருமையை எங்களை விட்டு அக ற்றி, தாழ்மையை அணிந்து கொள்ளுவோம்.

**யாக்கோபு 4:6**

ஆதலால் தேவன் பெரு மையுள்ளவர்களுக்கு எதி ர்த்து நிற்கிறார், தாழ் மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென் று சொல்லியிருக்கிறது.

**ஜெபம்:** பரலோக தேவனே, என்னுள்ளத்தில் எந்த விதத்திலும் பெரு மையை கொண்டிராதபடிக்கு, இயேசுவைப் போல மனத்தாழ்மையை அணிந்து கொள்ள என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | ஐப்பசி 28

📖 மாலை வாசகம் – யோவான் 8:43 – 44

# பொய் உதடுகள்

உண்மையைப் பேசினால் எனக்கு தண்டனை கிடைக்கும் எனவே பொய் சொல்லி விடுவோம் என்று ஒரு மாணவன் தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான். சில வேளைகளிலே இப்படிப்பட்ட செயல்கள் பெரிய பாரதூரமான குற்றச் செயல் போல மனிதர்களுக்கு தோன்றுவதில்லை. சிறிய விதை வளர்ந்து எப்படி பெரிய விருட்சமாகின்றதோ, அதே போலவே, நாங்கள் எங்கள் வாழ்க்கையில் செய்யும் நன்மை தீமைகளும் ஒரு நாள் வளர்ந்து பெருகி, அதன் கனியைக் கொடுக்கும். பொய் பேசுகின்ற இருதயத்திலே மனந்திரும்புதலுக்கு இடமில்லை. பிசாசானவனிடத்தில் உண்மை இல்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் என்று இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, சத்தியம் (உண்மை) இயேசுவிலே நிலைத்திருக்கின்றது. அவரிலே நிலைத்திருக்கின்றவர்கள் சத்தியத்திலே நிலைத்திருக்கின்றபடியால், பொய் பேசுதல் அவர்கள் வாழ்க்கையில் இருப்பதில்லை. பொய் பேசும் சுபாவம் பிசாசானவனுக்குரியது. அதை தேவன் வெறுக்கின்றார். ஏனெனில், அந்த சுபாவம் எங்கள் வாழ்க்கையை அழித்துப் போடும். சில வேளைகளிலே முகவர்கள், தங்களுடைய வியாபாரம் வெற்றியடைய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, பொய்யை பேசாவிடினும் உண்மையைக் கூறுவதில்லை அல்லது உண்மையை மறைத்து விடுகின்றார்கள். முதல் முறை இப்படியாக செய்யும் போது மனதிலே குற்ற உணர்வு உண்டாகும், அதிலிருந்து மனந்திருப்பாத விடத்து, நாளடைவில் அந்த குற்ற உணர்வானது இருதயத்தை விட்டு அகன்று இருதயம் கடினப்பட்டு போய்விடும். இது எங்கள் நாளாந்த வாழ்க்கையில் ஒரு உதாரணம். எந்த ஒரு நற்கிரியையும் முதலில் கடினமாகவே தோன்றும் ஆனால் அந்த நற்கிரியைகளால் மனதில் உண்டாகும் சந்தோஷத்தை வர்ணிக்க முடியாது. எனவே இந்த உலகிலே நஷ்டம் ஏற்பட்டாலும், தேவனுக்கு முன்பாக நாங்கள் உண்மையுள் ளவர்களாக இருப்பதே எங்களுடைய ஆத்துமாவிற்கு நலமானது. பொய் உதடுகள் தேவனுக்கு அருவருப்பானவைகள். எனவே அவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் உண்மை வழியிலே நடப்போம்.

**நீதிமொழிகள் 12:22**

**பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.**

**ஜெபம்:** சத்தியமுள்ள தேவனே, சிறிய காரியம் என்று கூறி பொய் பேச பழகிக் கொள்ளாமல், எப்போதும் உமக்கு முன்பாக நான் உண்மையுள்ள வாழ்க்கை வாழ எனக்கு அருள் புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆதரவற்றவர்களை ஆதரியுங்கள்

ஒரு ராஜ்யத்திலே வறட்சி ஏற்பட்டிருந்ததால், உணவுப் பண்டங்களுக்கு தட்டுப்பாடு உண்டாயிற்று. அரச இலாகா ஒன்றிலே, ஜனங்களுக்கு தானியம் வழங்கப்படுகின்றது என்று அறிந்த ஊரிலுள்ள ஏழைக் குடிகள் அதிகாலையிலிருநது வரிசையில் நின்றார்கள். பல நாட்களாக தங்கள் பிள்ளைகளுக்கு ஒழுங்கான ஆகாரம் இல்லாததினால் எப்படியாவது தங்கள் பிள்ளைகளை போஷிக்க வேண்டும் என்று கவலையடைந்திருந்தார்கள். காலையிலே பண்டகசாலைகள் திறக்கப்பட்டு, தானியம் வழங்கப்படும் நேரத்தில், அதிகாரத்திலுள்ள மந்திரிகளுக்கு அறிமுகமானவர்கள் என்று, வரிசையில் நிற்காத அநேகர் உள்ளே சென்று தானியங்களை எடுத்துச் சென்றார்கள். அதனால் அநேக ஏழைகள் தானியங்கள் இன்றி பசியோடு வீடு சென்றார்கள். கருப்பொருளாவது, இந்த உலகிலே ஏழைகளுக்கு ஏற்படும் ஒடுக்கு முறைகளில் சில வேளைகளிலே எங்களை அறியாமலே பல வழிகளில் நாங்களும் உடந்தையாகி விடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. அநாதைகளையும், வாழ்விழந்திருக்கும் விதவைளையும் விசாரித்து, அவர்களுக்கு ஆதரவாக இருப்பதில் தேவன் பிரியப்படுகின்றார் என்பதை குறித்து நாங்கள் தியானித்தோம். அதே நேரத்திலே, விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும் போது, அவர்கள் என்னை நோக்கி முறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு, கோபமூண்டவராகி, அவர்களை ஒடுக்கின்றவர்களுக்கு கடும் தண்டனையை வழங்குவேன் என்றும் தேவன் கூறியிருக்கின்றார். திக்கற்றவர்களையும் விதவைகளையும் நேரடியாக ஒடுக்குவதற்கு நாங்கள் அநியாயம் உள்ளவர்கள் அல்லர் என்று நாங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் இந்த கட்டளையானது தேவனுடைய ஜனங்களுக்கே கொடுக்கப்பட்டது. அநாதரவானவர்கள் முன்குறித்தபடி தங்கள் கடனை அடைக்க நிர்வாகம் இல்லாதிருந்தால், அவர்களை மன்னித்து விடுங்கள் அல்லது அவர்கள் கேட்கும் கால அவகாசத்தைக் கொடுங்கள். வார்த்தைகளினாலோ கிரியைகளினாலோ அவர்கள் மனதைப் புண்படுத்தாதிருங்கள். உங்கள் சகோதரரில் ஒருவரைப் போல அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**யாத்திராகமம் 22:22**

விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக

**ஜெபம்**: ஏழைகளை ஆதரிக்கும் தேவனே, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எனது சொல்லாலும், நடக்கையாலும் ஆதரவற்றவர்களுக்கு அநீதி செய்யாதபடிக்கு அவர்களை ஆதரிக்கும்படி என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் அடைக்கலமானவர்

அங்குமிங்குமாய் ஓடி விளையாடும் குழந்தை, வெளி முற்றத்திலே விளையாடிக் கொண்டிருந்தது. குறித்த அந்த வேலிப்பக்கமாக போக வேண்டாம் என்று தந்தை பலமுறை கூறியிருந்தும், அன்றைய நாளிலே, குறித்த அந்த பக்கமாக செல்ல முயன்ற போது, காலில் முள் குத்திவிட்டது. இந்த வேளையிலே அந்த குழந்தைக்கு இன்னுமொரு அடி எடுத்து வைக்க முடியவில்லை. வீறிட்டு அழுதபடி தன் கரங்களை தன் தந்தையை நோக்கி தூக்கியது. தந்தையும் விரைந்து சென்று, தன் பிள்ளையை தூக்கி தேற்றிய பின்பு, அந்த சிறிய முள்ளை காலிருந்து மிகவும் கவனமாக எடுத்து விட்டார். இந்த பூமியிலே நாங்கள் வாழும் நாட்களிலே, எத்தனை முறை எங்கள் பரம தந்தையாகிய தேவனுடைய வார்த்தையை கேளாமல் போனோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! அதன் விளைவாக, எங்கள் வாழ்க்கையில் ஆபத்தும், பெலவீனமும், சோர்வும் உண்டாகி விடுகின்றது. நாங்கள் தேவனுடைய சொல்லுக்கு கீழ்ப்படியாதது உண்மை. ஆனால் எங்கே ஓட முடியும்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும் என்று தேவ பக்தனாகிய தாவீது ராஜா கூறினார். ஆம்! தேவனை விட்டு நாங்கள் எங்கும் போகமுடியாது. நாங்கள் குற்றம் செய்து விட்டோம் என்று அவருக்கு ஒழிந்து கொள்ள முடியாது. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அதைவிட அதிகமாக, நாங்கள் வேறு எங்கும் சென்று நிம்மதியை அடைந்து கொள்ள முடியாது. திக்கற்றிருக்கும் போது அவரே எங்கள் அடைக்கலம். எங்கள் ஆபத்து காலத்தில் அவரே எங்களை ஆதரிக்கும் துணை. எங்கள் பெலவீன நேரங்களில் அவரே எங்களது பெலன். எனவே எப்படியாக சிறு குழந்தை, இக்கட்டான சூழ்நிலையில், தன் கரங்களை விரித்து தன் தந்தையை நோக்கிப் பார்த்ததோ, அதே பிரகாரமாக, நாங்களும் எங்கள் இக்கட்டான நேரங்களில் எங்கள் அன்புள்ள பரம தந்தையை நோக்கிக் கூப்பிடுவோம்.

**சங்கீதம் 46:1**

**தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.**

**ஜெபம்**: அடைக்கலமான பரம தந்தையே, பயங்கரங்கள் சூழும் வேளையிலே உம்மைவிட்டு தூரம் போகாமல் உம்மை அண்டிச் சேரும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோக பொக்கிஷம்

இந்த பூமிக்குரிய பொக்கிஷங்களை அல்ல, பரலோகத்திற்குரிய பொக்கிஷங்களை உங்களுக்கு சேர்த்து வையுங்கள் என்று இயேசு கூறியிருக்கின்றார். எடுத்துக் காட்டாக, ஒரு உலக பிரபல்யமான அதி சிறந்த பாடகன், தன் வாழ் நாட்கள் முழுவதும் தேவனுடைய சித் தத்திற்கு தன்னை ஒப்புக் கொடாமல், உலக சம்மந்தமானதும், காதல் சம்மந்தமானதுமான பாடல்கள் பாடி, தனக்கென கோடிக் கணக்கான ரசிக ர்களை ஏற்படுத்தி, உலகிலே சரித்திரம் படைத்து இந்த உலத்தைவிட்டு போவ தால் அவன் ஆத்துமாவிற்கு இலாபம் என்ன? ஒன்றுமில்லை என்று வேதம் கூறுகின்றது. எளிமையும் சிறுமையு மான இன்னுமொருவன் தேவனுடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்து, உலக பிரபல்யமற்ற தன்னுடைய சொந்த குரலினாலே, தேவனுக்கு ஏற்புடைய தெய்வீக கானங்களை பாடி, தன்னை படைத்த வரை துதித்து வந்தான். அவன் இந்த உலகத்திலே சரித்தரம் படைக் காவிட்டாலும், அவனுக்கென்று அநேக ரசிகர்கள் இந்த உலகத்திலே இருக்காவிட்டாலும், அவன் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும் போது, அக்கரையிலே இயேசுவோடு நித்தியமாக சுகித்திருப்பான். இன்றைய உலகிலே, பலவிதமான தலாந்து உள்ளவர்கள், தாங்கள் வளர்ந்து வந்த சபையிலே தேவனை ஆராதித்து வந்தால், தாங்கள் பிரபல்யமாக முடியாது என்ற நோக்கத்திற்காக, பல காரணங்களை காட்டி, பிரிந்து சென்று விடுகின்றார்கள். பிரியமானவர்களே, நாங்கள் எப்போதும் தேவனுடைய சித்தம் செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். எங்களுடைய சுயவிருப்பத்தின்படி எங்கள் தெரிவுகள் இரு க்கக்கூடாது. பல உலக பிரசித்தி பெற்ற மேற்கத்தைய பாடகர்கள், தங்கள் ஊரிலே, சிறிய ஆலயத்திலே ஞாயிறு ஓய்வு நாள் பாட சாலைக்கு சென்று வந்தவர்கள், அவர்களுக்குரிய ஆரம்ப பயிற்ச்சி கள் யாவும் ஆலயத்திலே கொடுக்கப்பட்டது. ஆனால் வாலிபப்பிரா யம் வந்ததும், உலக பாடல்களினால் வரும் மேன்மையை தேடிச் சென்று, தங்கள் வாழ்வை முற்றாக அழித்து, பாதி வயதிலேயே மரி த்துப் போனார்கள். தேவன் எங்களையும் எங்கள் கிரியைகளையும் ஏற்றுக் கொள்வாராக இருந்தால், நாங்கள் பிரபல்யமாவதில் தவறி ல்லை. ஆனால் நாங்கள் பிரபல்யமாகியும் எங்கள் கிரியைகள் தேவ னுக்கு ஏற்புடையதாய் இருக்காவிட்டால் அதனால் இலாபம் ஒன்று மில்லை. எனவே, பரலோகத்திற்குரியவைகளை நாடித் தேடுவோம்.

**மத்தேயு 6:20**

**பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர் த்து வையுங்கள்**

**ஜெபம்:** பரலோக தந்தையே, என்னுடைய கிரியைகள் யாவும் உமக்கு ஏற்புடையதாக இருக்கும்படிக்கு என் நடைகளை நான் காத்துக் கொள் ளும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்!

உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**



gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

| |
|---|
| |
| |

முகவரி ADDRESS:

| |
|---|
| |
| |

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

www.gtachurchnet.ca ☎ 416.613.2909